யுனெஸ்கோ

உலகைக் காட்டும் ஜன்னல்

கூரியர்

ஆகஸ்ட் 1967 ஆண்டுச் சந்தா ரூ. 10-50 தனிப் பிரதி ரூ. 1



எழுத்துக் கலை



National History Museum, Mexico-
L. Limon Aragon

எழுதுகோல் கலைஞர்கள்

Photos from "Eccentric Typography" by Walter Hart Blumenthal, published by Achille J. St. Onge, Worcester, U. S. A. 1963

பல சித்திரக்காரர்கள் எழுத்தையும் சித்திர வேலைப்பாடுகளையும் தங்கள் ஓவியங்களிலும் சித்திரங்களிலும் பயன் படுத்தியிருக்கிறார்கள். மேலே இடது புறம் உள்ளது 18ம் நூற்றாண்டைச் சேர்ந்த மெக்ஸிகோ நாட்டுப் பிரபுவான கவுன்ட் டி கால்வெஸ் உடைய வண்ண ஓவியம். பாப்லோ டி ஜீஸஸ், ஸான் ஜெரோனிமோ ஆகிய இரண்டு பாதிரியார்களுடைய கலைப் படைப்பு இது. மேலே உள்ளது பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ள சிசிரோவின் 'அராடி' கையெழுத்துப் பிரதியிலிருந்து எடுத்தது. 10வது நூற்றாண்டைச் சேர்ந்த இது எழுத்துக்களால் அமைந்த சென்டார் எனும் கிரேக்க தேவதையின் உருவம். கீழே இடது புறம் உள்ளது அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கனுடைய படம். உருவத்தின்மீது விடுதலைப் பிரகடனம் எழுதப்பட்டுள்ளது.



உலகைக் காட்டும் ஜன்னல்
யுனெஸ்கோ கூரியர்

ஆகஸ்ட் 1967

யுனெஸ்கோவினால்
பதினோரு பதிப்புகளாக
வெளியிடப்படுகிறது

ஆங்கிலம்
ஃபிரெஞ்சு
ஸ்பானிஷ்
ரஷ்யன்
ஜெர்மன்
அராபிக்
அமெரிக்க ஐக்கிய நாடு
ஜப்பானிஸ்
இத்தாலியன்
ஹிந்தி
தமிழ்



அட்டைப் படம்

ஈஸ்டர் தீவிலுள்ள "பாடும் மரக்கட்டைகள்" மனிதர்கள் விலங்குகளுடைய மர்மமான குறியீடுகளைக் கொண்டுள்ளது. இது யாராலும் இன்னும் வாசிக்கப்படவில்லை. மரக்கட்டையின் ஒரு பகுதி அட்டையில் உள்ளது. தனியே காட்டப்பட்டுள்ளது இதில் இருக்கும் ஆறு உருவங்கள்.

C Musée de l'Homme, Paris

பக்கம்

4. எழுத்துக் கலை
9. ஹிட்டைட், மாயா சிற்ப வேலைப்பாடு
10. எகிப்தியர் புனித எழுத்து முறைக்கு சம்போலியன் பொருள் கண்டது
13. ஆப்பு வடிவ எழுத்து முறைத் தோற்றம்
14. நெடுங்கணக்கு முறைத் தோற்றம்
17. புனித நூல்களின் சுவட்டில்
18. ஆசிய எழுத்துக்களின் குடும்பம்
20. ஐரோப்பா எவ்வாறு எழுதத் தொடங்கியது
22. எழுத்துக் கலையின் வரலாற்று எதிரொலிகள்
24. ஸிரிலிக் நெடுங்கணக்கின் பதினோரு நூற்றுண்டுகள்
26. மர்மம் சூழ்ந்த எழுத்து முறைகள்
30. புராதன சீனாவின் கருத்துக் குறியீடு
34. தமிழ் 'கூரியர்' வெளியீட்டு விழா

ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார ஸ்தாபனம்

ஆசிரியர் அலுவலகம் :
யுனெஸ்கோ, பிளேஸ் த ஃபான்டினுய்
பாரிஸ்-7, ஃபிரான்ஸ்.
பிரதம ஆசிரியர் :
ஸாண்டி காஃப்ளர்
உதவிப் பிரதம ஆசிரியர் :
ரெனி காலோஸ்
பிரதம ஆசிரியருக்கு உதவியாளர் :
லூஸியோ அட்டினெல்லி
நிர்வாக ஆசிரியர்கள் :
ஆங்கிலப் பதிப்பு: ரொனல்ட் ஃபென்டன் (பாரிஸ்)
ஃபிரெஞ்சுப் பதிப்பு: ஜேன் ஆல்பர்ட் ஹெஸ்ஸே (பாரிஸ்)
ஸ்பானிஷ் பதிப்பு: அர்ட்டுரோ டெஸ்பூயே (பாரிஸ்)
ரஷ்யன் பதிப்பு: விக்டர் கோலியச்காவ் (பாரிஸ்)
ஜெர்மன் பதிப்பு: ஹான்ஸ் ரீபன் (பெர்ன்)
அராபிக் பதிப்பு: அப்தல் மோனிம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ் பதிப்பு: ஷின்-இச்சி ஹஸகாவா (டோக்யோ)
இதாலியப் பதிப்பு: மரியா ரெமிட்டி (ரோம்)
இந்திப் பதிப்பு: ஏ. சந்திரஹாஸ் (டில்லி)
தமிழ் பதிப்பு: எஸ். கோவிந்தராஜுலு (மதருஸ்)
ஆராய்ச்சி : ஓல்கா ரோடல்
அமைப்பு, சித்திரம் : ராபர்ட் ஜாகுமின்

யுனெஸ்கோ கூரியர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. அக்டோபர்-நவம்பரில் ஒரே இதழாக வெளிவரும் (ஆண்டுக்கு 11 இதழ்கள்) காப்பிரைட் அல்லாத தனிப்பட்ட படங்களையும், கட்டுரைகளையும் யுனெஸ்கோ கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டு பிரசுரித்துக் கொள்ளலாம். அவ்வாறு பிரசுரித்த இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்பட வேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும் போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெறவேண்டும். காப்பிரைட் அல்லாத போட்டோக்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெறாத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோவின் அல்லது யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதி பலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

விற்பனை, வினியோக அலுவலகம் :
441, பூந்தமல்லி ஹைரோடு, சென்னை-10.
ஆண்டுச் சந்தா ரூ. 10.50

எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியர் விலாசத்துக்கே எழுதப்பட வேண்டும்.

'எழுத்துக்கலை' என்ற யுனெஸ்கோவின் பொருட் காட்சியொன்று 1964-ம் ஆண்டு ஜனவரி 21ந்தேதி மேற்கு ஜெர்மனியிலுள்ள பேடன்-பேடன் என்ற இடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதில் இருந்த நூற்றுக் கணக்கான புகைப்படங்களும் விளக்க உரைகளும் கொண்ட ஐம்பது பகுதிகள் எழுத்தின் கதையைக் கூறுகின்றன. பல்வேறு முறைகள் தோன்றி வளர்ந்ததையும் அவை மனிதர் வாழ்வில் ஏற்படுத்திய செயல் விளைவுகளையும் தெரிவிக்கின்றன.

யுனெஸ்கோ பொருட்காட்சி, பாரிசில் உள்ள நவீன கீழ்த்திசை மொழிகள் கல்லூரி பேராசிரியர் டாக்டர் மார்ஸல் கோஹன் வகுத்த திட்டத்துக் கேற்ப, ஆம்ஸ்டர்டாம் ஸ்டெட் லிஜ்க் மியூசியத்தின் முன்னுள் தலைவரான வில்லியம் ஜே. ஸாண்ட்பர்க், டாக்டர் டிட்ரிச் மாஹ்லோவுடைய உதவியுடன் ஏற்பாடு செய்ததாகும், இதர நாடுகளிலுள்ள அறிஞர் களும் தங்கள் உதவியை அளித்தனர்.

இந்த இதழில் யுனெஸ்கோ கூரியர் பொருட் காட்சியில் இடம் பெற்ற படங்களையும் விளக்கங்களையும் பரவலாக எடுத்தாண்டிருக்கிறது. எழுத்துக்கலை பற்றிய ஏராளமான படங் களுடன் கூடிய 130 பக்கங்கள் கொண்ட நூல் ஒன்று தொகுக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் எதிம்பெல்லுடைய முன்னுரையும் டாக்டர் மார்செல் கோஹனுடைய அறிமுகமும் கொண்ட அதிலிருந்து பின்வரும் கட்டுரை சிறிது சுருக்கி எழுதப்பட்டுள்ளது. இந்நூல் ஏற்கனவே ஜெர்மன் மொழியில் வெளியாகியுள்ளது. ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ஸ்பானிஷ் மொழிகளில் தயாராகிக் கொண்டிருக்கிறது.

எழுத்துக்கலையின் வளர்ச்சி, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்ல. அறியாமை, உலகுக்குப் பெரும் சவாலாகக் கருதப்படும் கட்டத்தில் எழுதுவது எப்போதும் போலவே இன்னும் மனித வளர்ச்சி எல்லாவற்றிற்கும் அடிப்படையானது என்பதை அது நினைவூட்டுகிறது.

எழுத்துக் கலை

மார்ஸெல் கோஹன்

முதல் 'படிவங்கள்' ஓவியங்கள் மூலம் கூறப்பட்ட ''வார்த்தை இல்லாக் கதை''களாகும். இங்கு காட்டப் பட்டுள்ள குறியீடுகள் பனமாவி லிருந்த குன இந்தியர்களுடைய நினை வாற்றலுக்கு உதவுபவை. மந்திர உச் சாடனம் செய்பவர்களுக்கு உப யோகப்பட்டவை. வரிகள் அடுத் தடுத்து வலமிருந்து இடமாகவும் இட மிருந்து வலமாகவும் உள்ளன.

Unesco



எழுத்தின் கதை பல்வேறு இடங்களில் பலவித மாகத் தொடங்கியிருக்கிறது. மனித வரலாற்றின் நேரக்கணக்கில் அது ஒரு கணத்துக்கு மேற்படாத ஒன்று தான் என்றபோதிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

கருவிகள், ஆயுதங்கள், பாண்டங்கள் ஆகியவற் றைப் பயன்படுத்திய மனிதர்கள் ஐந்து லட்சம் வருடங் களுக்கும் முன்பே இருந்திருக்கலாம் என்பதை சமீப கண்டு பிடிப்புகள் உணர்த்துகின்றன. கற் கருவிகள் இன் றளவும் நிலைபெற்றுள்ளன. இதர கலைப் பொருள்கள் மரத்தில் செய்யப்பட்டவையாதலால் அவற்றின் மாதிரி கள் கிடைக்கவில்லை.

நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு மேற்படாத அண் மைக் காலத்தில்தான் இப்போது நாம் அறிந்துள்ளது போன்ற (மூளை வளர்ச்சியில்) மனிதனைக் காண்கிறோம். அவனிடம் நன்கு உருவாக்கப்பட்ட கருவிகள் இருந்த துடன் அவர்களில் சிலர் இன்றைய ருசிக்கேற்ப உயி ரினங்களின் உருவத்தை செதுக்கவும் ஓவியமாக தீட்டவும் கூடியவர்களாக இருந்தனர் என்பதையும் காண்கிறோம்.

வெகு காலத்துக்கு முற்பட்ட இந்த மக்களுக்கு கலையுணர்வும் பயன்படும் தன்மையும் ஏற்கனவே நெருங் கிய தொடர்புடையதாக இருந்தது என்பது தெளிவு. சூழ்நிலைக்கேற்பப் பொருள்களைச் செய்வதும் அவற்றைப் பொருத்தமான வழிகளில் பயன்படுத்துவதும் உபயோக கரமானது என்று அவர்கள் எண்ணியது போலத் தோன்று கிறது. அவர்களது இன்பம் உண்மையான படைப்பு வேலையிலிருந்தும் நிலையற்ற மங்கலான வெளிச்சம் நிலவும் தங்கள் குகை வாழிடங்களில் சிந்தனையில் லயித்திருப்பதி லிருந்தும் ஒரு வேளை உண்டாகியிருக்கலாம்.

இந்த உருவங்களுக்கு என்ன மந்திரசக்தி இருப்ப தாகக் கூறப்பட்ட போதிலும் அவற்றை செய்வதுமட்டும் அவர்களுடைய கலையுணர்வின் வெளியீடாக இருக்கவில்லை. அன்றாட உபயோகப் பொருள்களும் கூட சித்திர வேலைப் பாடுடையனவாக உள்ளன. அணிகலன்களைக் கூட அவர் கள் செய்தும் அணிந்தும் வந்தனர்.

முறையாக ஒழுங்கு படுத்தப்பட்ட சாதனமாக பேச்சு படிப்படியாக வளர்ச்சி பெற்றபோது அதற்குப் பதிலாக ஒன்றைக் கண்டு பிடிக்கவும் பாதுகாக்கவும் ஓரளவுக்கு வழி காணப்பட்டிருக்கவும் கூடும். எழுத்துக்களுக்கு முன்பு வழக்கில் இருந்த குறியீடுகள் இங்குதான் வரு கின்றன. எழுத்துக்களுடன் கூட குறியீடுகளும் பல உப யோகங்களுக்குத் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது.

கலை அல்லது அதன் இடத்தை எடுத்துக் கொள்ளும் வரையும் ஆற்றல், பேச்சைக் கண்கூடான முறையில் புலப்படுத்தும் எல்லா வழிகளுக்கும் அடிப்படையாகும். இவை எல்லாவற்றினுடைய மூலமும் ஓவிய எழுத்தில் (Pictography) உள்ளவை. ஓவிய எழுத்துக்கலையின் ஆரம்ப வடிவத்தைத் தொடக்க நிலையிலுள்ள பல்வேறு எழுத்தில் காணலாம். அதில், காண்கின்ற யாரும் அது உணர்த்தும் பொருளை அறிந்து கொள்ளும் வகையில் பேச்சின் ஒரு பகுதிக்கு உரு வடிவம் கொடுக்கப்பட்டிருக் கும். வெவ்வேறு வார்த்தைகளாக அதைப் பிரிக்க முடியாது. எனவே குறிப்பிட்ட ஒரு மொழியுடன் தொடர்புடையதல்ல அது.

பொதுவாகக் கூறினால் இவை ''வார்த்தை இல்லாத கதைகள்.'' சூழ்நிலையைப் படங்களாலும் பொருள்களை குறியீடுகளாலும் குறிப்பவை. இந்தக் குறியீடுகளைப் பயன்படுத்தும் முறையும் உபயோகமும் அவற்றைப் பயன் படுத்தும் பல்வேறு சமூகங்களில் மாறுபடும்.



From Kühn, *Die Felsbilder Europas*, Stuttgart 1952.

ஆறாயிரம் ஆண்டுக்கால வரலாறு

நினைவாற்றலுக்கு உதவும் ஓவிய எழுத்துக்கள் முற்றிலும் வேறான பிரிவாகும். இவற்றில் விளக்கமான விவரங்கள் இராது. கதை கூறுபவர்களுக்கு நினைவு படுத்தும் சாதனங்களாக மட்டுமே இவை இருந்தன.

வாக்கியங்களை பல வார்த்தைகளாகப் பிரித்து எழுதும் உண்மையான எழுத்து முறை நகர்களை அமைக்கத் தொடங்கிய நாகரிகக் கட்டத்தையடைந்த சமூகங்களில்தான் உண்டாக முடியும். இது ஏற்படுவதற்கு முன்பு முறையான வர்த்தகமும் எல்லாவற்றுக்கும் மேலாக கலைஞர்கள் கையில் கட்டிடக்கலை வளர்ச்சியும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

கி. மு. 4000 ஆண்டுக்கு முற்பட்ட எழுத்துபூர்வமான ஆதாரம் எதுவும் தொல் பொருள் ஆய்வாளர்களுக்குக் கிடைக்கவில்லை. வாழ்வதற்கு இன்றியமையாத தேவையாக இராத எழுத்தின் வரலாறு ஆறாயிரம் ஆண்டுகளைக் கொண்டதாகும் எனலாம். இப்போதும் கூட உலகம் முழுவதும் அது உபயோகத்தில் இல்லை. ஏனெனில் உலகின் மக்கள் தொகையில் ஏறத்தாழப் பாதிப் பேர் எழுதத் தெரியாமலே வாழ்கின்றனர்.

உண்மையான ஓவிய எழுத்தில் ஒவ்வொரு வார்த்தையும் உணர்ந்து கொள்ளக்கூடிய ஒரு தனி குறியீட்டால் குறிக்கப்பட வேண்டும். இதற்கு ஓவிய ஒலி எழுத்து முறை (Rebus System) என்று பெயர். இப்போதும் கூட சில விளையாட்டுக்களுக்கு இது பயன்படுத்தப் படுகிறது. எடுத்துக்காட்டாக கிரணங்களுடன் கூடிய வட்டம் சூரியனைக் குறிக்கும். தலையணி ஒன்றின் படம் தொப்பியைக் குறிக்கும். விலங்குகள் மரபு வழி சித்திரங்களால் குறிக்கப் பெறும்.

இத்தகைய பொருள்-குறியீடுகள் அதே சமயத்தில் வார்த்தைக் குறியீடுகளும் ஆகும். அவை புலப்படுத்தும் பொருள். அவ் வார்த்தையின் ஒலிக்கு எவ்விதத் தொடர்பும் உடையதல்ல. கருத்துக் குறியீடுகளாக அவை பயன்படுத்தப் படுகின்றன. எனவே கருத்துக் குறியீடு என்றே அவை அழைக்கப் படுகின்றன. வடிவத்தைப் பொருத்த வரை படங்கள் தத்ரூபமாக இருக்கும் வரையில் அவற்றை எழுத்துக்குப் பதிலாக நிற்கும் பொருள் வடிவம் (Hiero-Glyphs) என்று அதன் விரிவான அர்த்தத்தில் கூறலாம். புராதன எகிப்தியர் எழுத்துக்களுக்குக் கிரேக்கர்கள் கொடுத்த பெயர் இது.

இந்தக் கருத்துக் குறியீடுகள் (Ideographs) ஒரு முழு வார்த்தையைக் குறிப்பதாக இருந்தால் இம் முறையை உச்சரிப்பைப் பொருட்படுத்தாமல் பல்வேறு மொழிகளிலும் பயன்படுத்திப் படிக்க முடியும். ஆனால் பல்வேறு சூழ்நிலைக்கேற்ற ஏராளமான சித்திரங்கள்மட்டும் தேவைப்படும்.

கண்டுபிடிப்பின் அடுத்த கட்டத்தில் ஒலிக்கு உருவம் கொடுக்கப்படுவதைக் காண்கிறோம். எழுதுவது—முதலிலும் குறிப்பிட்ட ஓர் அளவுக்கும்—ஒலிக்குறியீடு ஆகிறது. ஆனால் ஓவிய எழுத்து அல்லது கருத்துக் குறியீடுதான் இன்னமும் இம் முறைக்கு அடிப்படையாக உள்ளது. இதற்கு ஒரு மொழியை விரிவாக ஆராய வேண்டும். அப்போது ஒரே விதமான ஒலியைக் கொண்ட சிறு சொற்கள் அதில் இருப்பதைக் காணலாம். உதாரணமாக ஆங்கிலத்தில் Sun என்பது சூரியனையும் Son என்பது மகனையும் குறிக்கும். இரண்டும் ஒரே 'சன்' என்ற ஒலியுடையவை. இதனால் ஒரு குறியீட்டைக் குறைக்கலாம்.

மேலும் சென்று சொற்களை அதன் அங்கங்களாகப் பிரித்தால் சில வார்த்தைகளை ஓரசைக்கு மேற்பட்டதாகப் பிரிக்கலாம். உதாரணமாக 'பான்ட்ரி' என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். 'பான்' 'ட்ரி' என்ற சொற்களுக்குரிய குறியீடுகளை சேர்த்து இதை குறிப்பிடலாம். இங்கே எழுதுவது வடிவத்தில் கருத்துக் குறியீடாக இருந்த போதிலும் இப்போது அது சம்பந்தப்பட்ட மொழியுடனும் அதன் ஒலிகளுடனும் நேரடியாக தொடர்புடையது.

எழுதுவது உட்பட ஒருவகை நகர் நாகரிக கட்டம் மத்திய அமெரிக்காவில் ஏற்பட்டது. மாயப்பேரரசு கி. பி. நாலாம் நூற்றாண்டில் இருந்திருக்கலாமெனத் தோன்றுகிறது. ஆனால் பல்வேறு காரணங்களினால் 16-ம் நூற்றாண்டில் ஸ்பானிஷ் படையெடுப்புக்கும் முன்பே மறைந்து விட்டது.

பிரமிட்களும், மகத்தான மாடிப்படிகளும் கொண்டது மாயர்களது கட்டிடக் கலை. அவர்களது பெரும் வளர்ச்சிக்கு சான்றாக இடிபாடுகள் உள்ளன. எழுதுவது கட்டிடக்கலையுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். படிக்கட்டுகளில் பொருள் குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளன. சுதைச் சிற்பங்களும் ஓவியங்களும் கிடைத்துள்ளன.

மாயர்கள் மரப்பட்டை அல்லது காகிதத்தில் வண்ண ஓவியங்களைத் தீட்டி சதுர வடிவில் ஒழுங்காக வரிசைப்படுத்தி வைத்தனர். எல்லா விதமான புராணக் கதைகளும் தங்களுடன் தொடர்புடையவை என்பதைக் குறிப்பதாக அவை உள்ளன. குருமார்களின் குடும்பத்தாருக்கும் பெரும் பிரபுக்களுக்கும்தான் மாயர் லிபி தெரியுமென்று கூறப்படுகிறது. ஆனால் நினைவுச் சின்னங்களிலுள்ள எழுத்துக்கள் எல்லோரும் காண்பதற்காக உள்ளவை. அதைப் பார்த்து அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கவேண்டும்—ஐரோப்பாவிலுள்ள ரோமன், கோதிக் கதீட்ரல்களிலுள்ள சிலைகள், கண்ணாடி ஓவியங்களைப்



From Koch-Grunberg, Sudamerikanische Felszeichnungen, Berlin, 1907

எழுத்துக்களின் கரு

உண்மையான எழுத்து படிப்படியாக வளர்ந்தது வரையப்பட்ட அல்லது செதுக்கப்பட்ட உருவங்களிலிருந்துதான். இதன் மூலம் புராதன நாடோடி மக்கள் ஒரு குறிப்பிட்ட வழி அல்லது இடத்தைக் குறித்தனர். சில குறிகள் உருவங்களுடையவாக வுள்ளன. அதிலுள்ள பொருளை எளிதில் உணர முடிகிறது. மற்றவை இங்கு காட்டப்பட்டுள்ளது போன்று தெளிவில்லாததாக உள்ளன. அவற்றின் பொருள் இன்னமும் நமக்குத் தெரியவில்லை. இடமிருந்து வலம். சந்திர வடிவமும் அதன் கோடியில் இரு நட்சத்திரங்களும் (ஸ்பெயினில் கிடைத்த வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட ஓவியம்) பிரேஸிலில் கிடைத்த கல்லில் செதுக்கிய உருவம்.

போல. ஒரே விதமான நிகழ்ச்சிகள் குறிப்பிட்டகால இடைவெளிக்குப் பின் திரும்ப நிகழும் என்பது மாயர்களுடைய நம்பிக்கைகளில் ஒன்று என்பதும் நமக்குத் தெரியும். எனவே எதிர்காலத்தைப் பற்றிக் கூறுவதற்கு உதவக் கூடிய உண்மைகளை மறைப்பது நல்லது என்று அவர்கள் கருதியிருக்கக் கூடும்.

மெக்ஸிகோவில் 14-ம் நூற்றாண்டில் தங்களை நிலை நாட்டிக்கொண்ட அஸ்டெக்குகளும் நினைவுச்சின்னங்களைக் கட்டியிருக்க வேண்டும். ஆனால் ஸ்பானிஷ் படையெடுப்புக்குப் பிறகு அவற்றின் தடையங்கள் கூட மிஞ்சவில்லை. அதிர்ஷ்டவசமாக அதிகாரபூர்வமான மாயர் கையெழுத்துப் பிரதிகள் மூன்றுதான் இருப்பதாகக் கூறப்பட்ட போதிலும் அஸ்டெக் பிரதிகள் நிறையப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. சில மதம், வரலாறு, பூவியல் செய்திகளைக் கொண்டுள்ளன. அஸ்டெக் பத்திரங்களில் உள்ள இடப்பெயர்கள் மாற்றிய ஒலி வடிவ எழுத்து முறைக்கு எடுத்துக் காட்டாக உள்ளன.

உதாரணமாக கோட்லான் என்ற நகரம் ஒரு பாம்பினால் குறிக்கப்பட்டுள்ளது. அதன் கீழே ஈறுகளுடன் கூடிய இரண்டு பற்கள் உள்ளன. இது குறிக்கும் பொருள் ''பாம்புகளின் இடம்'' என்பதாகும். கோட் என்பது பாம்பைக் குறிக்கும் சொல். பாம்புகளின் இடம் என்பதற்காக கோட்லான் எனக் குறிக்கப்பட்டுள்ளது. ட்லான் என்பதற்கு பற்கள் என்று பொருள். இவ்வாறு ஒலி வடிவை ஆராயும்போது குறியீடு, உச்சரிப்பையும் பொருளையும் உணர்த்துகிறது.

சீனர் எழுத்து முறை கி. மு. 2500 ஆண்டுக்குரியது. அதற்கு முற்பட்ட காலத்திய எழுத்து முறைகள் இருந்த போதிலும் சீனர் முறையின் அமைப்புக்காகவே அதை இப்போது பார்க்கிறோம். ஓவிய எழுத்துமுறைக்கு சீனர் முறை நெருக்கமானதாகும். ஒவ்வொரு சொல்லுக்கும் ஓர் ஓவிய வடிவம் அதற்கு உள்ளது. அது மாறாத ஓரசைச் சொல்லாகும்.

இது முற்றிலும் உண்மையாக இருந்தபோதிலும் கூட மொழி வல்லுனர்கள் ஒரு விதமான கூட்டுச்சொல்லை உண்டாக்க இரு வார்த்தைகள் சேர்க்கப்படுவதாகக் கூறுகிறார்கள். ஆயிரக்கணக்கான உரு வடிவங்கள் உள்ளன. சாதாரண நூல்களைப் படிப்பதற்கு ஒருவருக்கு அவற்றில் 3000 உரு வடிவங்கள் தெரிந்திருக்க வேண்டும். அகராதிகளில் 40,000க்கும் மேற்பட்டவை உள்ளன.

சொல்லும் அணிகலனும்

பேச்சை காணும் விதத்தில் புலப்படுத்துவது எழுதும் திறமையிலிருந்து தொடங்கியது. முதலில் இது அலங்காரமாகவே பயன்படுத்தப்பட்டது. வலது புறம் இரண்டு எலாமைட் உருவங்கள். பாரசிக வளைகுடாவுக்கு வடக்கேயும் டைக்ரிஸ் நதிக்கு கிழக்கேயும் வாழ்ந்த எலாமைட் மக்கள் கி. மு. 640-ல் அஸிரியாவிடம் தங்கள் சுதந்திரத்தை இழந்தனர். அவர்கள் உருவாக்கி ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பயன்படுத்திய லிபி பின்னர் உபயோகமில்லாமல்போயிற்று.



From ''The Alphabet,'' by David Diringer, London, 1949

C Ara Guler, Istanbul

ஹிட்டைட், மாயா சிற்ப வேலைப்பாடு

ஆசியா மைனரிலும் சிரியாவின் வட பகுதியிலும் வாழ்ந்த ஹிட்டைட் மக்கள் கி.மு.1500ம் ஆண்டிலேயே ஒருவகை எழுத்து முறையைப் பயன்படுத்தினர். பிறகு அவர்கள் பாபிலோனியர்களுடைய ஆப்பு வடிவ எழுத்தை உபயோகித்தனர். மதத் தேவைக்கேற்ப உருவாக்கப்பட்ட ஹிட்டைட் எழுத்து நினைவுச் சின்னங்களில் பொறிப்பதற்கு மட்டும் என ஒதுக்கப்பட்டது. (இடது புறம்) ஆப்பு வடிவ எழுத்துமுறை படித்தறியப்பட்ட பின்னரே பொருள் வடிவ எழுத்துக்களைப் புரிந்து கொள்ள முடிந்தது. இருபது நூற்றாண்டுகளுக்குப் பிறகு மத்திய அமெரிக்காவில் வாழ்ந்த மாயர்கள் சிற்பக்கலையுடனும் கட்டிடக் கலையுடனும் நெருங்கிய தொடர்புடைய ஒரு வகைப் பொருள் வடிவ எழுத்துக்களைக் கையாண்டனர். இது அவர்களது மதத்துக்கும் அவர்கள் வகுத்த பஞ்சாங்கத்துக்கும் உபயோகிக்கப்பட்டது. கண்டு பிடிக்கப்பட்டுள்ள உரு வடிவங்களில் மூன்றிலொரு பங்கு இந்த பஞ்சாங்கம் சம்பந்தப்பட்டது. வலதுபுறம் இரு மாயா முழு உருவங்கள் (கி.பி. 7ம் நூற்றாண்டு)

Unesco

பேசும் கற்கள்

இந்த உரு வடிவங்கள் ஒலி ரீதியாக குறிப்பிட்ட வகை ஒலிகளுடன் தொடர்புடையவை. பல ஒலிகள் பல்வேறு பொருள்களை குறிப்பவை. அவற்றின் பொருள் வேறுபாட்டை உணர்வதற்காக ஒன்று முதல் பதினேழு வரை கோடுகள் சேர்க்கப்படுகின்றன.

இந்த முறை கருத்துக்குறியீடு, ஒலி வடிவம் ஆகிய இரண்டுமாகும். எழுதப் படிப்பதற்கு எவ்வளவோ சிரமங்கள் இருந்த போதிலும் இன்று வரை அது நிலை பெற்றிருக்கிறது. பழைய எழுத்து முறையில் தேர்ச்சி பெறுவதற்கு முன்பு மாணவர்கள் படிப்பதற்காக லத்தீன் முறை லிபி அண்மையில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

பெரும்பாலான உருவடிவங்கள் சிக்கலானவை என்பதில் ஐயமில்லை. ஏராளமான சிறு கோடுகளைக் கொண்டவை இவை. சர்க்கார் அதிகாரிகள், உயர்குடி மக்கள் மட்டும் முன்பு எழுதி வந்தனர். இப்போது சீனாவில் எல்லோருக்கும் எழுதுவதற்குக் கற்றுத் தரப்படுகிறது.

கலையுணர்வு பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஒவ்வொரு சிறு எழுத்தும் சதுர வடிவில் அடுத்ததிலிருந்து குறிப்பிட்ட இடைவெளியில் ஒழுங்காக அமைந்துள்ளது. இப்படி எழுதுவது நுட்பமான கலை வேலைப்பாடாகும். சிறந்த ஓவியர்களின் சித்திரங்களைப் போலவே தேர்ந்த எழுத்தர்களுடைய வேலையும் சீனாவில் மதிப்புக்குரியதாக இருந்து வந்திருக்கிறது. எழுதுவது ஓர் அலங்கார அம்சமாகவே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

எகிப்தில் கிடைத்துள்ள நினைவுச் சின்னங்கள் பத்திரங்களில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களிலிருந்து கி.மு. 3000 ஆண்டிலேயே அங்கு முறையாக அமைந்த அரசும் பெரும் நகரங்களும் இருந்தன என்பதையறிகிறோம். அவற்றில் எழுதுவது நடைமுறையில் இருந்தது. கருத்துக் குறியீடுகளாகவும், கண்டறியக்கூடிய பொருள்களின் கவர்ச்சியான சித்திரங்களைக் கொண்டதாகவும் இவை இருந்தன.

ஆயிரமாண்டுகளுக்குப் பிறகு நேரொழுக்கமாக (Cursive Writing) எழுதும் முறை வளர்ச்சி பெற்றது. இதற்குப் பொதுவாக மை உபயோகிக்கப்பட்டது. குறியீடுகள் ஓவியத் தன்மையை இழந்துவிட்டன. வேகமாக எழுதுவதற்காக, அவை எளிதாக்கப்பட்டன. படிப்பவருக்கு தெளிவாக இருக்க வேண்டும் என்பதை விட வேகமாக எழுத வேண்டும் என்பதற்கு அவசிய மேற்பட்ட சந்தர்ப்பத்துக்கு முதல் எடுத்துக்காட்டாக இதனைக் கூறலாம். வெவ்வேறு கால கட்டங்களில் மாற்றம் செய்யப்பட்ட இந்த நேரொழுக்க எழுத்து முறையில் அடிப்படை முறை அப்படியேதான் இருந்தது.

அது சிக்கலான ஒரு முறை. மரபு விட்டுப் போய் விட்டால் நெடுங் கணக்கு முறையில் பழக்கப்பட்ட அறிஞர்களுக்கு அதன் பொருள் கண்டுணர்வது கடினம். பெரும்பாலான குறியீடுகள் சொற்குறிகள். நேர்முகமாகவோ அல்லது கருத்து மாற்றத்தினாலோ முதலில் இவை பொருள்களைக் குறித்தன. இந்த இரு முறைகளின் உதவியுடன் குறியீடுகளின் எண்ணிக்கையை சில நூறுக்குக் குறைத்து விடலாம்.

இதற்கிணங்க அதிகப்படியான இரு வழிகள் (உச்சரிப்பதற்கல்லாத குறியீடுகளின் வடிவில்) படிப்பதற்கு வசதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. முதல்வகை குறியீடு இப்போதுள்ள கருத்துக்குறியீட்டிலிருந்து தோன்றியது. அது அர்த்தங்களின் பிரிவைத் தெளிவு படுத்தியது (மனிதர்களும் அவர்களது செயல்களும், விலங்குகள், பாண்டங்கள் முதலியவை) சீனர்களது கோடுகளைப் போன்றது இது.

கிளியோபாட்ராவும் தாலமியும் சம்போலியனுக்கு கைகொடுத்தனர்

தாலமி

மேலே: பாரோ தாலமியின் பெயர் ரோஸட்டா கல்லில் உள்ளது போல. வலது: கிளியோபாட்ரா

1799-ல் நைல் பள்ளத்தாக்கிலுள்ள ஒரு புராதனக் கோட்டையிலிருந்து எடுக்கப்பட்ட கல். சில மைல்களுக்கப்பாலுள்ள நகரின் பெயரையொட்டி இதற்கு ரோஸட்டா கல் என்று பெயரிடப்பட்டது. இந்தக் கருநிறக்கல்லில் கி.மு. 196-ம் ஆண்டின் பிரகடனம் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. ஐந்தாம் தாலமிக்கு ஆலயங்களில் வழங்கப்பட வேண்டிய மரியாதையை அது விவரிக்கிறது. கல்லில் ஒரே வாசகம் மூன்று வடிவங்களில் உள்ளது. முதலாவது எகிப்தியப் புராதன எழுத்தில் 14 வரிகளை கொண்டது. இரண்டாவது புராதன எழுத்து முறையிலிருந்து தோன்றிய நடைமுறை எழுத்தில் 32 வரிகளைக் கொண்டது. மூன்ருவது கிரேக்க லிபியில் 54 வரிகளைக் கொண்டமைந்தது.

British Museum, London - Kunstarchiv, Arntz, The Hague







வலப்புறமும் கீழேயும். தம்முடைய மகத்தான வெற்றி குறித்து சம்போலியன் கல்வெட்டு ஆராய்ச்சிக் கழகத்துக்கு எழுதிய கடிதத்துடன் அனுப்பிய மூல சித்திரங்கள். கடிதமும் விளக்கத்துடன் சித்திரங்களும் பாரிசில் 1822-ம் ஆண்டில் பிரசுரிக்கப் பட்டன. வலதுபுறம். தாலமி, கிளியோபாட்ரா, அலக்சாந்தர், பெரினிஸ் போன்று தான் கண்டறிந்த பொருட் குறியீடுகளின் விளக்கத்தை தருகிறார் சம்போலியன். கீழ்க்கோடியில் பொருள் குறியீட்டு முறையில் தன் கையெழுத்தைப் போட்டுள்ளார். கீழே எகிப்தியர்களுடைய புராதன எழுத்து முறையின் ஒலிக் குறியீடும் அதற்கு சரியான கிரேக்க எழுத்துக்களும் தரப் பட்டுள்ள பட்டியல். Unesco photos



1822-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இருபத்தியிரண்டாம் நாள் எகிப்திய பழமை ஆய்வுத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்த ஓர் இளம் கற்றறிவாளர் பாரிசிலுள்ள பிரெஞ்சு தேசீய கழகத்தில் தம் சகோதரர் பணிபுரிந்து கொண்டிருந்த அறைக்குள் திடீரென்று நுழைந்தார். 'நான் அதைக் கண்டு பிடித்து விட்டேன்' என்று கூறி முடிக்கும் முன்னரே அவர் மயக்கத்தில் தளர்ந்து வீழ்ந்தார். அதிக வேலையால் சோர்வோடும் இரங்கத் தக்க நிலையிலுமிருந்த ஜீன் ஃப்ராங்கைஸ் சம்போலியன் அப்போதுதான் எகிப்தியர் கையாண்ட பண்டைய பொருள்வடிவ எழுத்துக்களின் புரியாத பொருளுக்கு விளக்கம் கண்டிருந்தார். அவர் குணமடைந்தவுடன் பாரிசில் உள்ள கல்வெட்டுக் கழகத்தின் செயலாளரான திரு. டேசியருக்கு எழுதிய கடிதமொன்றில் அச்செய்தியை அறிவித்தார்.

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் தாமஸ் யங் என்னும் ஆங்கிலேயர் ரோஸெட்டா கல்லில் மும்மொழியிலுள்ள, அரசர்களின் பெயர்களையும் தெய்வப் பெயர்களையும் கொண்டுள்ள பழைய எகிப்திய நீள் வட்டவளையத்தில் தாலமியின் பெயரை பொருள் வடிவ எழுத்துக்களில் கண்டறிந்தார் என்றாலும் அதன் பின்னர் அத்துறையில் வேறு முன்னேற்றம் ஏற்படவில்லை.

1821-ல் சம்போலியன் மகத்தான ஒன்றைக் கண்டுபிடித்தார். ரோஸெட்டா கல்லிலுள்ள பொருள் வடிவ எழுத்துக்களையும், கிரேக்க உரை மூலத்திலுள்ள அதற்கு ஏற்புடைய சொற்களையும் எண்ணுவதன் மூலம் பொருள் வடிவ எழுத்துக்கள் கிரேக்கச் சொற்களைவிட ஒன்றுக்கு மூன்று எண்ணிக்கையில் விஞ்சிவிடுவதை யுணர்ந்தார்; எனவே பல பொருள் வடிவ எழுத்துக்கள் சேர்ந்ததே ஒரு சொல்லாகும். கோரை நீர்ப்பூண்டிலிருந்து செய்த வரை தாளில் எழுதப்பட்டிருந்ததும் மக்கள் பேச்சு வழக்கிலிருந்ததுமான எழுத்துக்களை உபயோகிப்பதன் மூலம், தாலமியின் பெயர் பொருள் வடிவ எழுத்துக்களில் இருப்பதை அவர் ஊர்ஜிதம் செய்தார்; மேலும் 1822-ல் கிளியோபாட்ராவின் பெயரை உய்த்துணர்வதிலும் ஏறத்தாழ முழுமையான நுட்பத்துடன் எழுதுவதிலும் வெற்றிகண்டார். இப்போது மேற்கொண்டு குறியெழுத்துக்களை அடையாளம் கண்டுகொள்வதற்கு அடிப்படையான பதிஞேரு எழுத்துக்கள் அவரிடமிருந்தன. தட்மோஸிஸின் பெயரை அவர் குறியெழுத்தில் கண்டு பிடித்துக் கூறியது அவரது கூற்றை ஊர்ஜிதம் செய்தது; 1500—ஆண்டுகளாக அறியப்படாமலிருந்த பண்டை எகிப்திய வரலாற்றை அறிவதற்கு வழிகாட்டும் பொருள் வடிவ எழுத்துக்களைப் புரிந்துகொள்வதற்கு அவர் வழி வகுத்தார்.

களிமண்ணில் சுட்ட முனை திறம் வல்ல முக்கோணங்கள்

இரண்டாவது வகை, குறிகளின் உச்சரிப்புக்கு ஓர் உதவும் கருவியாகும். உச்சரிப்புக்கான சிறுசொற்களின் மெய்யெழுத்துக்களை (ஒன்று அல்லது இரண்டு மெய்யெழுத்துக்களை)க் குறிக்கும் ஒலியமைவு வடிவங்களும் குரலொலிக்குரிய நிரப்புக்கூறுகளும் அதிலிருந்தன. அனைத்துள்ளும் மிகுதியாகவிருந்த ஒற்றை மெய்யெழுத்துக்குறிகளில் எழுத்துக்களுக்குச் சமமாகப் பிற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட குறிகளைக் காண்கிறோம்.

சொற்கள் பல எழுத்துப் பகுதிகளாகப் பிரிந்ததைக் குறிக்கும் ஒலியமைவு வடிவங்கள் சொற்களது முற்குறிகளையும் பிற்குறிகளையும் குறிக்கப் பயன்பட்டன. இதன் காரணம் சொற்குறிகள் சொல் மூலங்களை மட்டுமே குறித்ததாகும். எனவே இந்த எழுத்துமுறை சொற்களின் கருத்துக் குறியீட்டு முறையும் குரலொலி முறையும் சேர்ந்ததாகும்.

இம்முறையில் பயனுள்ள காரியங்களுக்காக எழுதப்பட்ட பழமையான எழுத்துக்களின் உதாரணங்கள் இருந்திருக்கவேண்டும். ஆனால் எளிதில் அழிந்துபடக் கூடிய பொருட்களில் எழுதப்பட்டிருந்ததால் அவை அழிந்து போயிருக்கக்கூடும். இப்போதுள்ள பழமையான இவ்வெழுத்துக்களாலான பட்டயங்கள் அக்கால நிகழ்ச்சிகளை விவரிப்பனவாகவுள்ளன. அன்றாட வாழ்க்கை சம்பந்தப்பட்ட பட்டயங்களும், ஞாபகார்த்தமாக எழுதப்பட்ட எழுத்துக்களும் இதற்குப் பிற்பட்ட காலத்திலிருந்து நமக்குக் கிடைத்துள்ளன. ஒருவர் சொல்வதைப் பலர் எழுதும் மரபைக் காட்டும் வகையில் பல எழுத்தர்கள் சேர்ந்து எழுதுவதைச் சித்திரிக்கும் ஓவியங்கள், மூல உரைகளைப் பல பிரதிகள் எடுக்கும்—அதாவது நூல்களைத் தொகுக்கும்—வழக்கத்தின் தொடக்கத்தைக் காட்டுகின்றன.

வண்டு வடிவத் தாயத்துக்களில் லிபிகள் பொறிக்கப்பட்டு முத்திரைகளாகப் பயன்படுத்தப்பட்ட மரபும் எழுத்து உபயோகப்படுத்தப்பட்ட விதங்களைக் காட்டுவதாகவுள்ளது. பழைய எகிப்திய ராஜ்யங்களுக்குச் சமகாலத்ததான சிந்துப் பள்ளத்தாக்கு நாகரிகத்தில் இது போன்ற பல முத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இம்முத்திரைகளில் மட்டும் தான் (இது வரையில் படித்தறிய முடியாததோர் லிபியில்) எழுத்துக்கள் காணப்படுகின்றன.

ஐரோப்பியர்களுக்கு அருகாமைக்கிழக்கு எனப்படுகின்ற இடத்தின் மற்றொரு பகுதியில் ஏறத்தாழ அதே காலத்தில் எகிப்திய முறையைக் கருத்தளவில் ஒத்ததும் ஆனால் வேறு முறையில் சமைக்கப்பெற்றதுமானதோர் எழுத்து வகை வளர்ந்தது. மேற்குறிப்பிட்ட ஓவியவெழுத்துக்களுக்கும், இப் பிராந்தியத்தின் சமயத்திலும் இலக்கியத்திலும் பெரும் பங்கு பெற்ற இருமொழிகளை எழுதுவதற்குப் பயன்பட்ட பண்டைப் புகழ்வாய்ந்த ஆப்பு வடிவமுள்ள லிபிகளுக்கு மிடையே சுமார் ஆயிரம் ஆண்டுகள் உள்ளன. இவ்விரு மொழிகள் இன்னமும் அவற்றுக்கிடையேயுள்ள தொடர்புகள் நிலைநாட்டப்படாத சுமேரிய மொழியும், அக்கேடிய (அஸ்ஸிரோ—பாபிலோனிய) அல்லது கீழைச் செமிட்டிக் மொழியுமாகும்.

முந்தைய கலை நயமற்ற ஓவியங்கள் காலப்போக்கில், ஆணிகளைப்போல் ஒரு கோடியில் சிறு முக்கோணமுள்ள வரை கீற்றுக்களின் இணைப்புக்களாகவும், அம்புக்குறியோ அல்லது ஆப்பு வடிவமோ தோன்றும் வண்ணம் இருபுறமும் நீட்டப்பட்ட (இதனாலேயே ஆப்பு வடிவ எழுத்துக்கள் என்று பெயர் பெற்ற) முக்கோணங்களாகவும் பரிணமித்தன. களிமண் பாளங்களைச் சுடுவதற்கு முன் அவைகளின் மீது மென்மையாகவோ அழுத்தமாகவோ எழுதுகோலின் முனையால் அமுக்குவதன் மூலம் இவ்வெழுத்துக்கள் உருவாக்கப்பட்டன.

தாம் உபயோகிக்கும் இரு மொழிகளின் இலக்கண ஒப்பீடுகள் உள்ளிட்ட பல விஷயங்களை ஆழமாகக் கற்ற பல மெசபடோமிய எழுத்தர்கள் தமது கோணவடிவான உபகரணங்களைப் பயன்படுத்தி உண்மையான, அழகிய கையெழுத்துக்கலையை வளர்த்தனர். தம் மூல நூல்களைச் சிறப்பான யூகத்துடன் வரிசைப்படுத்தி, பிரமிக்கவைக்கும் அளவுக்கு மிகச்சிறு எழுத்துக்களைச் சிறுசிறு விடங்களில் பொருத்தி, வெற்றிடங்களைத் திறமையோடு நிரப்பினர்.

Louvre Museum, Paris - M. Chuzeville

கி.மு 2400-ம் ஆண்டைச் சேர்ந்த சுண்ணாம்புக் கல் பாளம் ஒன்றிலுள்ள செதுக்கு வேலைப் பாட்டில் லாகாஷ் மன்னன் உர்னன்ஷி குடும்பம் சித்திரிக்கப்பட்டுள்ளது. அரசன் ஆலயம் கட்டுவதற்காகச் சுண்ணக் கலவையை எடுத்துச் செல்லும் சடங்கு மேலே காட்டப்பட்டுள்ளது. கீழே யுள்ளவர்கள் அதிகாரிகள். எழுத்தும் உருவங்களும் நெருக்கமாக ஒன்றோடொன்று கலந்துள்ளன.

ஆப்பு வடிவ எழுத்து

கி.மு. 2250-ம் ஆண்டைச் சேர்ந்த உருளை வடிவ சுமேரிய முத்திரை. இதில் பொறிக்கப்பட்டுள்ள பெயருடன் சூரிய தேவனை விடுவிக்கும் காட்சி படமாகக் காட்டப்பட்டுள்ளது.

கோரைப் புல் நுனியில் பிறந்தது

எகிப்தியர்கள், கிரீட் மக்கள், சீனர்கள் போலவே மெசபடோமியா வின் கீழ்ப்பகுதியில் வாழ்ந்த சுமேரியர்களும் மிகவும் திறனுள்ள எழுத்து முறையை ஆரம்பகாலத்திலேயே கண்டறிந்தவர்கள். ஓவிய வடிவத்திலிருந்து அசை வடிவத்துக்கான முதல் நடவடிக்கையை எடுத்துக் கொண்டவர்கள் அவர்கள்தான். அதன்மூலம் இன்று நாமறிந்துள்ள எழுதும் முறை வளர்வதற்கு உதவியவர்கள். கி.மு. 3000 ஆண்டில் சுமேரியர்கள் முத்திரைகளைச் செய்தனர். பிறகு சொற்குறிகளைப் பயன்படுத்தினர். இந்த ஓவிய வடிவத்துக்குப் பின்னர் ஒலி வடிவம் தரப்பட்டது.. அதன் மூலம் தெளிவான விளக்கம் கிடைத்தது. இந்த ஒலிக் குறியீட்டில் பேச்சுச் சொற்கள் எல்லாவற்றையும் குறிப்பிட முடிந்தது. கி.மு. 2500க்குள் எழுதுவது ஆப்பு வடிவக் கோடுகளாக உருவாயிற்று. அதனால் தான் ஆப்புவடிவ எழுத்து என்ற பெயர் வந்தது. ஈரக் களிமண் பாளங்களில் எழுத்தாணியால் எழுதப்பட்டது. கோரைப் புல்லின் கூரிய நுனி எழுத்தாணியாக இருந்தது. பாபிலோனியர்களும் அஸிரியர்களும் பின்னர் ஹிட்டைட்களும் பாரசீகர்களும் சுமேரியர்களின் ஆப்பு வடிவ லிபியை எடுத்துக் கொண்டு தங்கள் மொழிகளுக்கேற்பச் செய்துகொண்டனர். கல்லாதவர்களுக்கு உதவுவதற்காக சில சமயம் எழுத்துடன் விளக்கப்படம் ஒன்றும் சேர்க்கப்படும். ஆனல் இப்போது படங்களுக்கும் எழுத்துக்கும் ஒன்றுக்கொன்று தேவை இருக்கவில்லை. படிப்பதும் எழுதுவதும் மெசபடோமியா முழுவதும் பரவத் தொடங்கியது.



சுமேரியர்களுடைய சித்திரக் குறியீடுகள் எவ்வாறு ஆப்பு எழுத்து முறையாக வளர்ச்சி பெற்றன. வார்த்தை முதலில் ஒரு சித்திரமாக வரையப்பட்டது. இது பக்கவாட்டில் திரும்பியது. பின்னர் களிமண் பாளத்தில் எழுதுகோலால் எழுதப்பட்டபோது திட்டமான அமைப்புப் பெற்றது. கடைசியாக ஒருவித எழுதும் முறையாயிற்று. மெசபடோமியாவில் ஆயிரக்கணக்கான பாளங்கள் கண்டெடுக்கப்பட்டு பொருள் உணரப்பட்டுள்ளன. வலது புறம் மேலேயிருந்து பறவை, மீன், கழுதை, எருது உருவத்திலிருந்து தோன்றிய குறியீடுகள்.

Middle East Museum, Berlin-Maribor

எழுத்தை உருவாக்கியவர்கள்

எழுத்தின் வரலாற்றில் மிக முக்கியமான ஒரு அபிவிருத்தி புராதன உலகின் நடமாட்டம் மிகுந்த பெருவழியான அண்மைக் கிழக்கில் ஏற்பட்டது. கி.மு முதல் இரண்டாம் ஆயிரவாண்டில் ஆப்பு எழுத்து முறையும் மறைபொருள் குறியீடும் சர்வதேச வாணிபத் தேவைக்குப் போதுமானதாக இல்லை. 20 அல்லது 30 குறியீடுகளை மட்டும் கொண்ட நெடுங்கணக்கை உருவாக்க முயன்றனர். ஃபீனிஷியர்கள் நடைமுறை சாத்தியமான தங்கள் லிபியை இப்போது பரப்பினர். குறிப்பாக வட ஆப்பிரிக்கக் காலனிகளில் அது நிலைபெற்றது. அதனுடைய அராமிக், கிரேக்க வடிவில் அது இரு சக்தி வாய்ந்த கிளைகளை உண்டாக்கியது. அது இறுதியில் உலகின் பெரும் பகுதியில் இடம் பெற்றது. இடது புறம். ஜெஞ்சிர்லி மன்னன் பாரகாப் (கி. மு 750) உருவமுள்ள அராமிக் கல்வெட்டு.

நெடுங்கணக்கு தோன்றியது

எகிப்திய மொழியில் உள்ளதைப்போலப் பெரும்பாலான குறிகள் (பழைய சுமேரிய மொழியில் சுமார் 500 குறிகள்) பழைய ஓவியக்குறிகளிலிருந்து உருவான வார்த்தைக் குறிகளாகும். பல சுமேரியச் சொற்கள் இரு மெய்யெழுத்துக்களுக்கிடையே ஓர் உயிரெழுத்துக் கொண்டதாகவும், மற்றவை இன்னும் சிறியதாகவும் உள்ள ஓரசைச் சொற்களாகும்.

சுமேரிய, அக்கேடிய மொழிகள் இரண்டிலும் அதே குறிகள் வேறு பொருட்களைக் குறிக்கப் பயன்படுகின்றன. இரு மொழிகளிலும் சிறு சொற்களுக்கோ அல்லது பெருஞ் சொற்களின் பகுதிகளுக்கோ ஒலிமாற்றம் பயன்படுத்தப் பட்டது. ஆனல் (எகிப்திய மொழியினின்றும் மாறுபட்ட நிலையில்) உயிரெழுத்து எப்போதும் ஒலியமை வடிவத்தில் சேர்க்கப்பட்டது. அக்கேடிய மொழி சுமேரிய குறி வடிவங்களை அவைகளது பொருட்களுடன் எடுத்துக் கொண்டதாலும் செமிட்டிக் மூலத்திலிருந்து மாறுபட்டு மற்றவற்றைச் சேர்த்ததாலும் அது வேறுபட்ட பொருட்களையுடையதும், அது பயன்படுத்தப் பட்டுள்ளவிடத்தைக் கொண்டு மட்டுமே பொருள் காணக்கூடியதுமான பல குறிகளைச் சிறப்பான அளவுக்கு மிகுதியாகக் கொண்டது.

ஏறத்தாழ எகிப்திய மொழியில் உள்ளது போலவே இங்கும் ஆப்பு வடிவமுள்ள குறிகள் பயன் படுத்தப்பட்டன; சொற்குறிகள் பொதுவாக, ஒலிகுறித்துக் காட்டாத சொல்லின் கருத்துக்குறியீடுகளின் மூலம் காட்டப்பட்டுள்ளன. எகிப்திய மொழியில் உள்ளதைவிடக் குறைவான அளவுக்கே அக்கேடிய மொழியில் பொருள் விளக்கத்திற்கான துணைக்குறிகள் இருந்தாலும் அவை சுமேரிய மொழியிலிருந்ததைவிட அதிகமானவை. ஒலியமை வடிவங்களாலும் குரலொலிக்குரிய நிரப்புக் கூறுகளாலும் படிப்பது சாத்தியமாகிறது; இவைகள் சொற்களின் இறுதியிலும் துவக்கத்திலும் பயன்படுத்தப்படுகின்றன; ஒட்டிடைச் சொற்களுக்கு மட்டுமின்றி அவையிருந்தாலும் இல்லாவிட்டாலும் சொற்களுடைய மூலத்தின் பகுதிகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. படிப்பது எப்போதுமே ஓர் சிக்கலான காரியமாகவிருந்தது; ஓர் குறிப்பிட்ட குறியின் பல்வேறு பொருட்களையும் அறிந்தவர்களுக்கே அது சாத்தியமாயிற்று.

சொற்களின் கருத்துக் குறியீடுகளையும் அசை வடிவான குரலொலிக்குரிய குறிகளையும் கொண்ட ஆப்பு வடிவ எழுத்து முறை நாகரிகத்தின் ஊர்தியாக தென் கிழக்கில் ஏலாமுக்கு (Elam)ப் பரவியது; அங்கு பழமையானதும் விளங்காததுமான மறை பொருட்குறியீடுகளாலான எழுத்து முறை வளரவில்லை. சுமார் மூவாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் எலாமியர்கள் ஆப்புவடிவ எழுத்துக்களை உபயோகித்து வந்தனர்; அவர்கள் அவ்வெழுத்துக்களின் ஒலியமை வடிவங்களைப் பெரிதும் பயன்படுத்தினர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மறை பொருட் குறியீட்டு எழுத்து முறையும் ஆப்புவடிவ எழுத்துமுறையும், மெசபடோமியாவிற்கு வட்மேற்கிலுள்ள ஹிட்டைட் நாட்டில் நிலவி வந்தது. இங்குள்ள அநேக சொற்கருத்துக்குறியீடுகள் பல கல்வெட்டுக்களைப் படித்தறிந்து அவைகளின் பொருளைப் பொதுவாக அறிந்துகொள்ளப் பயன்பட்டுள்ளன.

க்ரீட், ஸைப்ரஸ் போன்ற ஏஜியன் தீவுகளில் வளர்ந்த மாறுபாடுடைய நாகரிகங்களிலும் மறை பொருட் குறியீட்டுக் கட்டத்தில் துவங்கிய எழுத்துக்கள் வளர்ந்தன. வெகு துரிதமாக ஒலியமை வடிவத்தின் உபயோகமும் தோன்றியது; அவைகளின் சொற்கள் முறையாக அசை ரீதியில் பிரிக்கப்பட்டு, அவ்வசைகள் உயிரெழுத்தால் தொடரப்படும் மெய்யெழுத்துக்களுடன் விளங்கின.



André 'Vigneau,' Ed." Tel

ஃபீனிஷியர்கள் தங்கள் எழுத்து முறையை கார்த்தேஜ் உள்ளிட்ட தங்கள் காலனிகளில் புகுத்தினர். அங்கு கண்டெடுக்கப்பட்ட கல் இது.



மேற்கு ஆப்பிரிக்கப் பெண் மணி ஒருத்தி எழுதிய கடிதத்தின் பகுதி. இப்போதும் சகாராவில் உபயோகிக்கப்படும் இந்த எழுத்து செமிட்டிக் எழுத்து முறையிலிருந்து தோன்றியது.

From La grande invention de l'écriture et son évolution, by Marcel Cohen, Paris, 1958

From " The Alphabet," by David Diringer, London, 1949

மண் ஓட்டில் காணப்படும் ஐபீரிய எழுத்து வலப்புறமிருந்து இடது பக்கமாக உள்ளது—ஃபீனிஷிய லிபியைப்போல. ஒரு வேளை இது அதனையொட்டி இருக்கலாம். கி.மு 400 ஆண்டைச் சேர்ந்தது இது.

சொற்கருத்துக்குறியீடு, குரலொலி ஆகிய இரு முறை களிலும் இருப்பதை விட இவ்வெழுத்து முறையில் சிக்க லான எழுத்துக்களின் எண்ணிக்கை குறைவு (உதாரணமாக மினோவன் (Minoan Linear) B-ல் 80-ம் ஸைப்ரயோட்டில் 55-ம் உள்ளன). கிரேக்க, இந்தோ-ஐரோப்பிய படை யெடுப்பிற்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்த மொழிகளில் உள்ள சான்றுகள் படித்துணரப்படவில்லை. அசை வடி வான எழுத்துக்களுள் ஆராய்ச்சியாளர்களால் படிக்கப்பட் டிருப்பது கி.மு. 1450-லிருந்து 1200-வரை கிரீட் தீவிலும், ஐரோப்பா கண்டத்தில் மைசீனியாவிலுமிருந்த கிரேக்க மொழியாகும்; இது கிரேக்கர்கள் அவ்வெழுத்தைப் பெறு வதற்கு முந்தைய காலத்தைச் சார்ந்ததாகும். கிரேக்கர் கள் வேறிடங்களில் எழுத்துக்களை ஏற்கெனவே எழுதி உபயோகித்து வந்த காலமான சுமார் கி.மு. 500-லிருந்து பல காலங்களைச் சேர்ந்ததும் ஸைப்ரஸில் உள்ளதுமான மூல உரைகளையும் அவர்கள் படித்து அறிந்துள்ளனர்.

மத்தியதரைக் கடலுக்குக் கிழக்கே எழுத்துக்கள் எங்கு எவ்வாறு தோன்றின என்பது நாம் அறியக்கூடவில்லை. மற்றவிடங்களைச் சார்ந்த எழுத்துக்களைப் போல அவையும் ஓவியக் குறுக்கெழுத்து வகையில் தோன்றியிருக்கலாம். அவைகள் ஃபீனீஷியாவில் கிடைத்துள்ள சில கல்வெட்டுக் களின் பொருள் வடிவ எழுத்துக்களோடு தொடர்புள்ளவை யென்று கொள்வதற்குத் தேவையான சான்றுகள் இல்லை. சினயில் கண்டெடுக்கப்பட்டதும், ஏறத்தாழ கி.மு. 1800 லிருந்து 1500 வரையுள்ள காலத்தைச் சார்ந்ததும், கலை நயமற்ற ஓவியங்களைப் போல சில குறிகளைக் கொண்டது மான கல்வெட்டுக்களோடும் அவைகளைத் தொடர்பு படுத்த முடியவில்லை.

ஆனல் ஒன்று மட்டும் நிச்சயம்; அருகாமைக் கிழக்கு நாகரிகத்தில் முக்கிய எழுத்துக்கள் நிலவி வந்தவிடங்களில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் மொழியின் நெடுங்கணக்கு அல்லது எழுத்துத் தொகுதி (Alphabet) கண்டுபிடிக்கப்பட்டது. இது நாமறிந்த வரையில் சொற் களின் மிகச் சிறு கூறுகளாலான குரலொலிக்குரிய எழுத்து முறையாகும். இவைகள் மிகக் குறைவானதும் (இருபதுக்கு மேலில்லை) எவ்வுருவத்தையும் குறிக்காத கோடுகளாலானது மான எளிமையான எழுத்துக்களாகும். இது வரிவடிவ ஒலிக்குறிக்கு முன்னேடியாக விளங்கியது.

மனிதன் தன் பேச்சின் உள்ளமைப்பு முறையைத் தெளிவாக அறிந்து, அப்படி அறிந்ததைச் செயல்முறையில் உபயோகிக்கத் தலைப்பட்ட காலம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கடல்களையும் பாலைவனங்களையும் தாண்டி நெடுந்தூரத்திலுள்ள இடங்களோடு கொண்டிருந்த வாணி பத்தால் செல்வச் செழிப்பு மிக்கதும், மக்கள் அநேகமாக கணிசமான அளவுக்கு அரசாங்கத்துடன் தொடர்பு கொண் டிருந்த இடங்களுமான சிறு நகர் நாடுகளிலேயே இது நிகழ்ந்தது.

நெடுங்கணக்கின் வரலாறு, அதன் தோற்றத்திலிருந்து இன்றுவரை, சிக்கல்கள் நிரம்பியவொன்றாகும். சில நிகழ்ச்சிகளின் தூண்டுதலால் எழுத்துக்கள் பரவிய முறை அவைகளின் வடிவங்களில் தோன்றிய சில தேசீய மாறுபாடு கள் (இது ஓரளவுக்குக் கலையுணர்ச்சியைக் காட்டுவதாக வுள்ளது), குரலொலிக் குறிகளை நிரப்புவதிலுள்ள பல வழி களில் விருப்பம் (குறிப்பாக உயிரெழுத்தைக் காட்டுவதில்), மற்றும் சொற்களின் கருத்துக் குறியீடுகளைக் கொண்டு வார்த்தைகளை வரையறுப்பதில் உள்ள பல்வேறு முறைகள் இவையனைத்தும் உள்ளிட்டதே எழுத்துக்களின் வரலாறு.

எழுத்து வளர்ந்த கதை

எழுத்துக்களின் முதலானதாகவும் ஊர்ஜிதமாக்கப்பட்டதுமான உபயோகம் (வடக்கு ஃபீனீஷியாவிலுள்ள) உகாரித்தில் தோண்டியெடுக்கப்பட்ட பாளங்களில் உள்ளதும் இடமிருந்து வலம் எழுதப்பட்டதுமான ஆப்பு வடிவமுள்ள எழுத்துக்களிலேயே காணப்படுவது ஓர் புதிராக உள்ளது. இந்த பாளங்கள் கி.மு. 1600-லிருந்து 1200க்கு உட்பட்ட காலத்தைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது; அதிலுள்ள மொழி அராமிய மொழியோடு நெருங்கிய தொடர்புள்ள மேற்கு செமிட்டிக் மொழியின் ஓர் வடிவம்.

இன்றைய எழுத்துக்களாக வளர்ந்துள்ள பண்டை எழுத்துக்கள் ஃபீனீஷியாவிலும் அதையடுத்துள்ள இடங்களிலும் அராமிய மொழிகளைப் பொருத்த அளவில் கி.மு. 1000-ம் ஆண்டுக் காலத்திலேயே தோன்றின.

இந்த நெடுங்கணக்கில் 22 எழுத்துக்களே இருந்தன. அவையனைத்தும் மெய்யெழுத்துக்களே. இதனின்றும், உயிரெழுத்துக்களும் இருந்திருக்க வேண்டுமென்றும், அவைகள் புறக்கணிக்கப் பட்டிருக்கலாமென்றும், எழுத்துக்கள் உயிரெழுத்துக்களற்ற அசை வடிவங்களென்றும் கருதப்படுகின்றன. எனவே இவ்வெழுத்துக்கள் அசையெழுத்து முறைக்கும், முற்றும் வளர்ந்து பரிணமித்த எழுத்துக்களுக்கும் இடைப்பட்டதாக கொள்ளப்படுகின்றன.

இந்த எழுத்துக்கள் உருவத்தில் மாறுபடுகின்றன; இவை சிறு எழுத்துக்களின் அளவை வரையறுக்கின்ற இரு கற்பனை இணை கோடுகளுக்கு மேலோ அல்லது கீழோ, நீண்டோ அல்லது தாழ்ந்தோ இருக்கின்றன. கற் சவப்பெட்டி அல்லது நடுகல் போன்றவற்றின் மீது எழுதப் பயன்படுத்தப்பட்ட நேரொழுக்கமான ஒருவகை எழுத்துப் போலவே இவை காணப்படுகின்றன. (இவற்றில் எழுத்துக்கு எழுத்து இடைவெளி உண்டு). பழங் கல்வெட்டுக்களிலும், மற்றொரு கானனைட் மொழியான மோஆபைட்டிலுள்ள கல்வெட்டொன்றிலும் சொற்கள் புள்ளிகளால் பிரிக்கப்படுகின்றன. எழுத்துக்கள் வலமிருந்து இடமாகச் செல்கின்றன.

துவக்கத்தில் (சுமார் கி.மு. 1000 ஆண்டளவில்) மற்றொரு மேற்கு செமிட்டிக் மொழியான அராமிய மொழியிலும் ஏறத்தாழ இதே வடிவுள்ள எழுத்துக்களால் வலமிருந்து இடமாக எழுதப்பட்டது.

ஏறத்தாழ கி.மு. 1000-ம் ஆண்டளவில் ஃபீனீஷியரிடமிருந்து நேரடியாகவோ அல்லது ஆசியா மைனரிலிருந்து பரவியதாலோ கிரேக்கர்கள் செமிட்டிக்கிலுள்ள மெய்யெழுத்துக்களை ஏற்றுக்கொண்டது பரந்த செயல் விளைவுகளுடையதாயிற்று.

உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் சேர்த்து எழுத்து முறையை முழுமை பெற்றதாகச் செய்தது முதல் வேலையாகும். உயிரெழுத்துக் குறிகளின்றி கிரேக்கர்களால் தமது மொழியைத் தெளிவாக எழுத முடியவில்லை; கிரேக்க மொழியிலிருந்த செமிட்டிக் மெய்யெழுத்துக்களை உபயோகிப்பதன் மூலம் உயிரெழுத்துக்களைச் சுலபமாக எழுதும் முறையைக் கண்டறிந்தனர். இப்படியாகக் குரலொலிமுறை முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது.

இந்தியாவில் ஏறத்தாழ கி.மு. ஐந்தாம் நூற்றுண்டில் எழுத்து தோன்றியிருக்கவேண்டும். அது அநேகமாக நிச்சயம் செமிட்டிக்கின் மெய்யெழுத்துக்களிலிருந்தே பெறப்பட்டதாகவிருந்தாலும், துவக்கத்திலிருந்தே எழுத்துக்களின் அமைப்பு கணிசமாக செமிட்டிக்கிலிருந்து மாறுபட்டிருந்த நிலை இக்கூற்றினைச் சந்தேகிக்க வைக்கின்றது. ஆனல் உறுதியாகத் தெரிவது என்னவென்றல் கிரேக்க மொழியிலிருந்து வேறுபட்டதோர் உயிரெழுத்துக் குறிமான முறை வளர்ந்து அசையெழுத்துக்கள் தோன்ற அடிகோலியது. எழுத்துக்கள் தாமாகவே மெய்யெழுத்துக்களாகப் படிக்கப்படுகின்றன. இவைகள் பொதுவாக அதிகமாக ‘அ’ என்னும் உயிரெழுத்தால் தொடரப்படுபவை. எழுத்துக்களுக்கு மேலோ அல்லது கீழோ அவைகளுக்கு முன்போ அல்லது அவைகளைத் தொடர்ந்தோ வரும் குறிகள் (எழுத்துக்களல்ல) நீளமாகவோ அல்லது குறுகலாகவோ உள்ளதும் பல்வேறு தொனியுள்ளதுமான உயிரெழுத்துக்களைக் குறிக்கின்றன. ஒரே வாக்கியத்திலுள்ள சொற்கள் இடைவெளியால் பிரிக்கப்படவில்லை; வாக்கியத்தின் முடிவு காட்டப்பட்டுள்ளது.

செமிட்டிக் முன் மாதிரியிலிருந்து வளர்ந்தவை கானனைட், அராமிய பிரிவுகள் மட்டுமல்ல; இதன் தென்பிரிவை சரி சீரமைவுடைய (ஒருகால் கிரேக்க மொழியினின்றும் விளைந்த) எழுத்துக்களுடைய தெற்கு அராபியக் கல்வெட்டுக்களில் காணலாம். ஒரு வரி இடமிருந்து வலமாகவும் அடுத்த வரி வலமிருந்து இடமாகவும் எழுதும் வழக்கம் முகப்புத் தோற்றத்தைப் பார்த்தவுடனேயே தொடர்ச்சியாகப் படிக்க ஏதுவாவதற்கு உதவியாயுள்ளது. இத்தகைய எழுத்துக்கள் மிகப் பெரும் பழங்கட்டிடங்களிலுள்ள கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இப் பிரிவிலிருந்து தோன்றிய எதியோப்பிய எழுத்து இடமிருந்து வலமாகச் செல்கின்றது.

இதன் மேற்கத்தியக் கிளையாக இருப்பது லிபியன் எழுத்துக்கள். இது அதிகவிடங்களில் உபயோகிக்கப்படவில்லை. வேறுபாடான தோற்றங்களிலுள்ள ஒரு சீரமைந்த இந்த எழுத்துக்கள் பண்டை நடுகற்களில் கீழிருந்து மேலாகப் படிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

கானனைட், உகாரிடிக், அக்கேடிய மற்றும் சுமேரிய மொழிகளினிடத்தை அராமிய மொழி படிப்படியாகக் கைப்பற்றிக் கொண்ட விடமான செமிட்டிக் பிரதேசத்தில் அராமிய எழுத்துக்கள் வலமிருந்து இடமாகப் படிக்கப்பட்ட பல வடிவங்களில் வளர்ந்தது. இப்போது இஸ்ரேல் நாட்டின் ஆட்சி மொழியாகவுள்ள சதுர வடிவான ஹீப்ரூ அதில் ஒன்று; சிறு நாடான எடிஸ்ஸா விலுள்ள ஸிரைக் மற்றொரு மொழி; இது இன்றும் சமய காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் லிபியாகும்.



இஸ்ரேல் நாட்டில் இப்போது உபயோகிக்கப்படும் லிபி, மேலே காட்டப்பட்டுள்ள கி.பி. ஐந்தாம் நூற்றுண்டைச் சேர்ந்த கல்வெட்டில் காணப்படும் ‘சதுர வடிவ ஹீப்ரு’ போன்றே அடிப்படையில் உள்ளது.

கூஃபிக் எழுத்துமுறை மிக அழகானதாகும். மெசபடோமிய நகரான கூஃபாவின் பெயரையொட்டி வந்தது. கி.பி. ஏழாம் நூற்றுண்டின் இறுதியிலிருந்து புகழ் பெற்ற எழுத்தர்களால் கையாளப்பட்டு வருவது இது. கீழேயுள்ளது கூஃபிக் லிபியில் குரான் வாசகம்.



Unesco photos

செமிட்டிக் பிரதேசத்திற்குத் தெற்கில் அரேபிய நாடோடிகள் நபேதனியர் களிடமிருந்து தமது எழுத்துக்களைப் பெற்றனர். இஸ்லாமின் வளர்ச்சியினால், இப்புது முறையானது, எழுத்துத் துறையில் மிகப்பெரும் விளைவுகளை உண்டு பண்ணுவதாயிற்று. குரானிலும், பாடம் கற்பிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்ற அராபிய எழுத்துக்கள் எளிதாக ஓடும் போக்குடையதும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டதுமாகும். குறிப்பாக அவைகளில் உயிரொலிக் குறிப் புள்ளிகள் எழுத்துக்களுக்கு மேலோ அல்லது கீழோ இல்லாமலிருக்கும். கவர்ச்சிகரமாகவும் சுவை நேர்த்தியுடனும் கலையழகோடு எழுதுவதற்குப் பயன்பட்டது. மேலும் பொருட்களின் மீதும் கட்டிடங்களின் மீதும்—குறிப்பாகக் கட்டிடங்களில் ஒப்பனைக்குரிய சாந்து பூசப்பட்டவிடங்களில் எழுதுவதற்கும் அது உபயோகப்பட்டது. அராபியர்களைத் தவிர மற்ற முஸ்லீம்களால் உபயோகிக்கப்பட்டதால் அது மத்திய ஆசியாவிலும், இந்தியாவின் சில பகுதிகளிலும் மலாய்த்தீவுக் கூட்டங்களிலும் ஆப்பிரிக்காவின் பல பகுதிகளிலும் பரவியது.

நேபாளத்திலிருந்து தெற்கே திராவிட மொழி பேசுமிடம் வரை இந்தோ-ஆரிய மொழிகள் வழங்குமிடங்களிலெல்லாம் இந்திய எழுத்துக்கள் பரவின. ஆனால் (இந்தியாவில் நிலைத்திருக்காத) பௌத்த மதத்தின் மூலம் அவ்வெழுத்துக்கள் வடக்கே திபெத்திலும் தென்கிழக்கே இந்தோ சீனாவின் பகுதிகளிலும் மலாய்த்தீவுக் கூட்டங்களிலும் பரவின.

பழமையான கிரேக்க மொழி எப்போதுமே ஓர் குறுகிய பிராந்தியத்திலேயே வழங்கி வந்திருக்கிறது. இருப்பினும் அது இக் குறுகிய பிராந்தியத்துக்குள்ளே பல வழிகளில் வளர்ந்து காலப் போக்கிலும், பல்வேறு திசைகளிலும் ஓரளவு கணிசமான அளவுக்கு மாறுபாடுடையதாக விளங்குகிறது. கீழ்த்திசையில் பிரிகியன் போன்ற இப்போது வழக்கில் இல்லாததும் பழங் காலத்தில் வழக்கிலிருந்ததுமான சில ஆசியா மைனர் மொழிகளை நாம் புறக்கணித்து விடுவதற்கில்லை. கிறிஸ்துவ மதத்தின் வளர்ச்சியோடு கிரேக்க லிபியானது, ஆப்பிரிக்காவில் எகிப்திய மரபினரான கிறிஸ்துவராலும், நூபாவினரது மொழியை எழுதுவதற்கும் பயன்படுத்தப்பட்டது. கோத் ஜெர்மானிய மொழியை எழுதுவதற்குங் கூட சிறிது காலத்துக்கு அது கருங்கடலுக்கு மேற்கே உபயோகிக்கப்பட்டது.

பின்னர் கிரேக்க லிபியானது இப்போதும் ஸ்லாவோனிய மொழிகளை எழுதப் பயன்படுகின்றதும் குறிப்பிடத்தக்க முறையில் ஒன்றையொன்று ஒத்துள்ள வடிவமுள்ள ஸிரில்லிக் எழுத்தைப் போன்றதுமான உருவத்தையடைந்தது. கீழ்த்திசையில் கிறிஸ்தவ மதத்தோடு அது பரவியது இதற்குக் காரணம். (கிரீஸ் மட்டும் இதற்கு விதி விலக்கு). பல்வேறு மூலாதாரங்களிலிருந்து பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டதும் மாறுபட்ட இயல்புகளை யுடையதுமான போலிகளை ஆர்மேனிய ஜியார்ஜிய மொழிகளில் காணலாம். சோவியத் யூனியனில் ஃபின்னோ உக்கிரியன் துருக்கி மற்றும் மங்கோலிய மொழிபோன்ற பிராந்திய மொழிகள் சிலவற்றில் அராபிய வெழுத்துக்களுக்குப் பதிலாக ஸிரில்லிக் எழுத்துக்கள் உபயோகிக்கப்படுகின்றன.

மேற்குத் திசையில் எந்தவிதமான மதச் சார்புமின்றி கலாச்சார விளைவினால் பழங்கால எழுத்து முறை பரவியது. எல்லா விடங்களையும் விட அது இத்தாலியில் பரவியது: அங்கு இன்றும் படித்தறியப்படாத விளங்காத மொழியுடைய எட்ருஸ்கன் களிடமும், எட்ருஸ்கர் மூலமாகவோ அல்லது வேறு மார்க்க மாகவோ லத்தீன் மொழி போன்ற இந்தோ-ஐரோப்பிய மொழி பேசுகின்ற இத்தாலிய மொழியாளர்களிடமும் பரவியது.

புனித நூல்கள் காட்டிய வழியிலே

கி.மு. 9வது 10வது நூற்றாண்டுகளில் வடக்கு சிரியாவிலுள்ள பல சிறு அராமிய நாடுகள் அஸிரியாவின் ஆதிக்கத்துக்கு ஒன்றன் பின் ஒன்றாக உட்பட்டபோது பெரும்பாலான மக்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர். இந்த நிர்ப்பந்த வெளியேற்றம் எதிர்பாராத விளைவை ஏற்படுத்தியது. அராமி மொழியும் லிபியும் அஸ்ஸிரியா முழுவதும் பரவியது. மத்திய தரைக் கடலிலிருந்து இந்தியா வரை, ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அராமிக் தான் வர்த்தக மொழியாக இருந்தது. யூத மதமும், கிறிஸ்தவ மதமும் இஸ்லாமும் தங்கள் கோட்பாடுகளை புனித நூல்களில் எழுதத் தொடங்கியதிலிருந்து எழுதுவதும் மதமும் வரவர அதிகத்தொடர்புடையதாயிற்று. மதம் பரவியதற்கேற்ப அதன் கோட்பாடுகள் எழுதப்பட்ட லிபியும் பரவியது. இன்று, உதாரணமாக அராமி லிபி அரபு மொழிக்கு மாத்திரமன்றி முஸ்லிம் மக்களுடைய வேறு பல மொழிகளுக்கும் மேலும் அதிக குறியீடுகளுடன் பயன்படுகிறது. இப்போது 'சதுர வடிவ ஹீப்ரு' எனப்படும் லிபி அரர்மிக்கிலிருந்து வளர்ச்சி பெற்றது.

வலதுபுறம். உய்கூர் எழுத்திலுள்ள 15-ம் நூற்றாண்டு கையெழுத்துப்பிரதி (மேலேயுள்ள இரண்டு வரிகள் அராமிக்கில் எழுதப்பட்டுள்ளன) உய்கூர் மக்கள் மத்திய ஆசியாவின் துருக்கி இனத்தவர். அவர்கள் எழுத்து மறைமுகமாக அராமிக்கிலிருந்து வந்தது.



Bibliotheque Nationale, Paris-Kunstarchiv Arntz, The Hague

Archæological Seminar of the University of Halle, Federal Republic of Germany

①

Unesco

②



Musée Guimet, Paris

④

Musée Guimet, Paris

③

1 - சிந்து வெளி மக்களின் முத்திரையிலுள்ள யானை, புலி, நீர்யானை மற்றும் புராண உருவங்கள் இன்னும் பொருள் கண்டுணராத எழுத்துக்களைக் கொண்டது.

2 - குஜராத்தியிலுள்ள 18ம் நூற்றாண்டுக் கையெழுத்துப் பிரதி. கி.பி. 11ம் நூற்றாண்டிலிருந்து இந்தியாவில் இது பரவலாகப் பயன்படத் தொடங்கியது.

3 - அச்சுப் பதிப்பதற்கான திபேத்திய மரச்செதுக்கு வேலைப்பாடு. சிறகுள்ள குதிரை உருவத்தைச் சுற்றிலும் எழுத்துக்கள் செதுக்கப்பட்டுள்ளன.

4 - மைசூரில் கிடைத்த 16ம் நூற்றாண்டு நடுகல். நடனப் பெண்களைச் சுற்றியுள்ள எழுத்து தெலுங்கு.

5 - மேலிருந்து கீழாகவும் இடப்புறமிருந்து வலமாகவும் படிக்கப்படும் மங்கோலிய லிபியிலுள்ள கையெழுத்துப் பிரதி. மேலேயுள்ள வரி திபேத்திய லிபியில் எழுதப்பட்டுள்ளது.

Westdeutsche Bibliothek, Marburg-Maribor

⑤



ஆசியாவின் எழுத்துக் குடும்பம்

5000 ஆண்டுகளுக்கு முன்பு சிந்து வெளியில் பயன்பட்ட லிபியிலிருந்து உருவானவையல்ல இந்தியர் எழுத்து முறை. நன்கு வளர்ச்சி பெற்ற இந்திய நாகரிகத்தில் 3000 ஆண்டுகளுக்கு முன் அவை தோன்றின. இப்போதுள்ள எழுத்து முறை கி. மு. 600-ம் ஆண்டு வாக்கில் அராமிக் எழுத்து முறை இருந்த இடங்களிலிருந்து வந்த வர்த்தகர்களால் புகுத்தப்பட்டிருக்கலாம்.

அசோகருடைய காலத்தில் (கி. மு. 272-231) பாறைகளிலும் தூண்களிலும் செதுக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் ஏற்கனவே அங்கு இரு வகைகள் உபயோகத்தில் இருந்ததைக் காட்டுகின்றன. இவற்றுள் ஒன்றான பிராமி இந்தியா முழுவதும் பரவியது. பின்னர் வந்த எல்லா பிராந்திய லிபிகளுக்கும் இதுதான் அடிப்படையாகும். மற்றொன்றான கரோஸ்தி வடமேற்குப் பகுதியில் மட்டும் உபயோகிக்கப்பட்டது. வலமிருந்து இடமாக எழுதப்படும் இந்த இந்திய லிபிகள் செமிடிக் மூலத்திலிருந்து கிளைத்தவை.

இந்திய நாகரிகம் பரவியது விரைவில் வெகு தூரத்திலுள்ள மக்களிடமும் லிபியை பரப்பியது. இவ்வாறுதான் புராதன பிராமியிலிருந்து சில மாற்றங்களுடன் உருவான குப்தா கிழக்கு துருக்கிஸ்தானில் மீண்டும் தோன்றியது.

நவீன இந்திய லிபிகள் இரு முக்கிய பிரிவுகளாக உள்ளன. ஒன்று வடக்கிலும் மற்றொன்று தெற்கிலும் பயன்படுத்தப்படுவது. வடபகுதியிலுள்ளது தேவநாகரி லிபி. வேறு பல மொழிகள் தங்களுக்கேயுரிய லிபியைக் கொண்டுள்ளன. தென்னிந்தியாவில் 180 லட்சம் மக்களால் பேசப்படும் தமிழ் மிகவும் தெளிவான எழுத்து முறையைக் கொண்டது.

இயந்திரத்தின் தாக்குதல்

லத்தீன் மொழியில் வாக்கியத்தின் முதல் எழுத்தின் லிபி, கிரேக்க மொழியில் உள்ளதைப் போலவே உருவத்தில் சமச்சீர் உடையதாகவும் தெளிவானதாகவுமிருந்தது. எனவே இந்த லிபி பழங்கட்டிடங்களில் கல்வெட்டுக்களைச் செதுக்குவதற்குப் பொருத்தமானதாகவாயிற்று; தேவையானபோது தூரத்திலிருந்தே படிப்பதற்காக எழுத்துக்களைப் பெரிதாகச் செதுக்கிக் கொள்ளலாம். அன்றாட உபயோகத்திற்கும், புத்தகங்கள் எழுதுவதற்கும் பல்வேறு பாணிகளிலமைந்த எழுத்துக்கள் உபயோகிக்கப்பட்டன. இவைகளது வளர்ச்சியே ஓர் தனி வரலாறாகும்.

சில அண்மைக்காலச் சுவடிகளிலும் கி.பி. *1501*-ம் ஆண்டுக்குமுன் அச்சிட்ட நூல்களிலும் உள்ளதைப் போலவும் காதிக் (Gothic) கட்டிடக் கலையிலுள்ள கூர்முனை வளைவுகளை நினைவு கூர்வதாகவுமுள்ள 'புக்-ஹாண்ட்' எனப்படும் காதிக் புத்தகவெழுத்து கி.பி. பதினைரும் நூற்றாண்டில் தோன்றியது. இதே காலத்தைச் சார்ந்த வேறொரு எழுத்து சிறப்பற்ற முறையில் அமைந்த நேரொழுக்கமான லிபியாகும். இதன் பின்னர் வந்ததே சுத்தமானதும் தெளிவானதும் இன்றைய அச்சிடப்பட்ட எழுத்துக்களுக்கு அடிப்படையுமான லிபியாகும்.

லத்தீன் எழுத்துக்கள் முதலில் ரோமானிய நிர்வாகத்தோடும் பின்னர் ரோமானிய கிறித்துவ மத வளர்ச்சியாலும் ஸிரில்லிக் மொழியின் எல்லைவரை ஐரோப்பா முழுவதும் பரவியது. பின்னர் ஐரோப்பிய கடல் வாணிபத்தாலும் காலனியாதிக்கத்தாலும் அமெரிக்கா உள்ளிட்ட உலகின் பல பகுதிகளுக்கும் அது பரவியது.

மத போதகர்கள் நிறுவிய கல்வி நிலையங்களில் பயன்படுத்தப்பட்டதால் லத்தீன் லிபியானது மடகாஸ்கரில் மலகாஸி மொழியினுடையதும் இந்தோ-சீனுவில் வியட்நாமிய மொழியினுடையதுமான தேவைகளுக்கு ஏற்றதாயிற்று. இந்தோனீஷிய, பிலிப்பைன் குடியரசுகளும் லத்தீனை தத்தம் தேசிய மொழிகளுக்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளன.

மின்சார யுகத்தில் எழுத்தறிவு போன்ற அறிவாற்றல் கருவி களால் துரிதமாக்கப்பட்ட தொழில் வளர்ச்சியானது எழுத்தறிவின் மூலம் அடையக் கூடிய சில பலன்களை மாற்று வழிகளினுலடைய அடிகோலியது. உதாரணமாக முன்னேற்ற மடைந்துள்ள போக்குவரத்து சாதனங்கள் ஒலிப்பதிவு செய்யும் முறை, தகவல்களை பரப்புவதற்கும் ஒலி பரப்புவதற்குமான சாதனங்கள், கல்வி, விளம்பரம், பொழுது போக்கு சாதனங்கள் போன்றவை இவற்றுள் குறிப்பிடத்தக்கன. தொலை பேசி, வானொலி, டெலிவிஷன், ஒலிப்பதிவு செய்யும் கருவி போன்றவை கடிதப் போக்குவரத்து, செய்தித்தாள்கள், நூல்கள், போன்ற எழுத்துக்களைப் பயன்படுத்துகின்ற சாதனங்களைப் பாதிக்கின்றன.

அச்சிட்ட நூல்கள் தோன்றுவதற்கு முன்பு எழுத்துக்கள் எதற்குப் பயன் பட்டனவோ அதற்கு அவை தொடர்ந்து பயன்பட்டு வரும். இந்நிலையில் அதன் நிலைமைக்குச் சவால் ஏதுமில்லை. ஆதார பூர்வமான அறிக்கைகள், ஒப்பந்தங்கள், பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள், நீதிமன்றத் தீர்ப்புகள், வார்த்தைக்கு வார்த்தை திருப்பிச் சொல்ல வேண்டிய சமயவுரைகள், ஒப்பந்த உறுதிகள், அலுவலக, சட்டமன்ற, நீதிமன்ற தஸ்தாவேஜிகள் போன்றவை இத்தகையவையாகும். சொந்தக் கடிதப் போக்குவரத்துக்கும், சொந்த தஸ்தாவேஜிகளுக்கும், எழுத்தாளர்களும் ஆசிரியர்களும் குறிப்பெழுதுவதற்கும் அது தொடர்ந்து பயன்பட்டு வரும்.

பேச்சுக்களைப் பதிவு செய்வது எழுத்துக்களின் இத்தகைய உபயோகத்தை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதும், அத்தகைய பதிவுகளுக்காக எந்த அளவுக்கு எழுத்துக்கள் (கையெழுத்தோ அல்லது 'டைப்' செய்யப்பட்ட எழுத்துக்களோ) பயன்படும் என்பதும் இன்னமும் விடை காண முடியாத கேள்விகள்.

எந்த அளவுக்கு இயந்திர ரீதியில் பதிவு செய்யப்பட்ட பேச்சு எழுத்துக்களின் இந்தப் பயனை மாற்றும்? இத்தகைய பதிவுகளைச் செய்வதற்காக எழுதப்பட வேண்டிய எழுத்துக்கள் எந்த அளவுக்கு உபயோகத்திலிருக்கும்? இவைகளெல்லாம் நாளையக் கேள்விகள்.



ஐரோப்பா எவ்வாறு எழுதத்தொடங்கியது



ஏஜியன் தீவான லெம்னோஸில் கிடைத்த ஏழாம் நூற்றாண்டுக் கல் தூணிலுள்ள கல்வெட்டு. இன்னும் பொருள் கண்டறியாத இவ்வெழுத்து எட்ருஸ்கன்களுடன் தொடர்புடைய ஒரு மொழியில் உள்ளது. இந்த இரண்டும் ஒரே மூலத்திலிருந்து தோன்றி இருக்கலாம்.

From L'Ècriture et la Psychologie des Peuples, Armand Colin, Paris, 1963



எட்ருஸ்கன் கல்லறை கல்வெட்டு. முதலில் கிரீக்கிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த நெடுங்கணக்கின் வளர்ச்சி எட்ருஸ்கன்களுடைய வரலாற்றில் ஏழு நூற்றாண்டுகளுக்கும் தொடர்ந்து இருந்தது.

From Buonamici, Epigrafia etrusca, Florence, 1932

சுமார் கி.மு. 1000 ஆண்டில் ஃபீனிஷிய எழுத்து செமிடிக் வர்த்தகர்கள் மூலம் கிரேக்கர்களிடம் பரவியது. பழைய கிரேக்க கல்வெட்டுகளிலுள்ள எழுத்துக்கள் ஃபீனிஷியர்களுடைய எழுத்துடன் ஒத்துள்ளன. உயிரெழுத்துக்களுக்கு தனி எழுத்துகளை உபயோகித்து கிரேக்கர்கள் தங்கள் நெடுங்கணக்கை நன்கு அமைத்தனர்.

கிரேக்கர்கள் இதனை இதாலிக்குப் பரப்பினர். எட்ருஸ்கன்கள் முதலில் இதனைக் கையாண்டனர். அவர்கள் வலமிருந்து இடமாக எழுதினர். (பக்கம் 28) ரோமானியர்கள் இதற்கு புதிய வடிவம் கொடுத்து உலக முழுவதும் பரப்பினர்.

கிழக்கு ஐரோப்பிய மக்களும் கிரேக்கர்களிடமிருந்துதான் எழுத்துக்களைப் பெற்றனர். ஜெர்மானிய ரூனிக் எழுத்து சில வட இதாலிய எழுத்துக்களின் அபிவிருத்தி செய்யப்பட்ட வடிவமாகும். ஸ்காண்டிநேவியாவில் கி. மு. 3ம் நூற்றாண்டிலேயே பயன்பட்டது. ஆரம்ப கால ஸ்லாவ் எழுத்துக்கள் கிரேக்கத்திலிருந்து உருவானவை.



ஸ்வீடனில் உள்ள கல்வெட்டு. புராண வீரனை ஸிகுர்ட் ஃபாப்னிர் என்ற பாம்பைக் கொல்கிறான். அதன் உடலில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் மந்திர சக்தி பற்றி ஆரம்ப கால ஜெர்மன் கதைகளில் நிறைய சம்பவங்கள் உள்ளன.

Kunstarchiv Arntz, The Hague

வலதுபுறம். லத்தீன் கல்வெட்டுக்களில் பழமையான ஒன்று. (கி.மு 600) ரோமன் அரங்கிலுள்ள 'கருங் கல்லில்' பொறிக்கப்பட்டுள்ளது.

Alinari, Florence





Unesco photos

எழுத்துச் சித்திரங்கள்

வலது பக்கம் காண்பது அரபு எழுத்துக் கலைக் கொண்டு வரையப்பட்ட அழகிய தோற்றமுடைய வானம்பாடிப் பறவைகளின் உருவம். இது பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. தங்கள் வாழ் நாளிலே நல்லது செய்பவர்கள் சொர்க்கத்தை அடைவார்கள் என்பதைக் கூறும் திருக்குரான் பகுதியைக் கொண்டது. இடது பக்கம் காண்பது பால் க்ளி என்னும் ஸ்விட்சர்லாந்து வண்ண ஓவியர் தாமாகவே கற்பனையால் சிருஷ்டித்த ஒரு லிபியைக் கொண்டு எழுதிய சித்திரம்.

எழுத்துக் கலையின் வரலாற்று எதிரொலிகள்

'எழுதுதலும் மக்களின் மனத்தத்துவமும்' என்ற தலைப்பில் பாரிஸ் நகரத்து அர்மண்ட்காலின் அண்மையில் ஒரு நூலை வெளியிட்டார் ஆய்வுக் கட்டுரைகள் கொண்ட அந்த நூலில், பற்பல இனத்தவர்களுடைய மனத்தத்துவம், சமூக வாழ்க்கை முறை ஆகியவற்றின் தன்மைகளுக்கும் எழுத்துக் கலையின் வரலாற்றுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிச் சிறந்த அறிஞர்கள் விளக்கம் கண்டிருக்கிறார்கள். அந்த நூலிலிருந்து சில பகுதிகளை தருகிறோம்.

எகிப்தியரின் பொருள்வடிவம்

பொருள் வடிவில் எழுதுவது ஐயம் திரிபு இல்லாமல் மிகவும் தெளிவாக அமைவதாகும். அதன் விதிகளைப் பிறழாமல் அப்படியே பின்பற்றினால் தவறு நேருவதற்கு இடமே இல்லை. இடமிருந்து வலமாகவோ வலமிருந்து இடமாகவோ வரிகளாகவோ பத்திகளாகவோ எவ்விதம் வேண்டுமானாலும் எழுத முடியும். அநேகமாக எல்லா இடங்களிலும் நாம் கடைப்பிடிப்பதற்கு எதிரான திசையிலே அவை காணப்படுகின்றன. பாடம் எந்தத் திசை நோக்கி எழுதப் பெற்றிருக்கிறதென்பதை அந்த லிபியில் காணும் உயிர்ப்பிராணிகள், சம அளவு கொள்ளாத உறுப்புகளைக் கொண்ட பொருள்கள் ஆகியவற்றின் உருவங்களைக்கொண்ட எழுத்துக்கள் எடுத்துக்காட்டும். அவை வலதுபுறம் திரும்பியிருந்தால் பாடத்தை வலமிருந்து இடதுபுறமாக வாசிக்கவேண்டும்; மாறாக இடதுபுறம் திரும்பியிருந்தால் இடதுபுறத்திலிருந்து வலதுபுறமாக வாசிக்கவேண்டும்.

ஜீன் ஸெயின்ட் பார் கார்னாட்



சார்லிமேம் என்னும் சக்கரவர்த்தியின் கையெழுத்து. அவர் கையெழுத்திட வேண்டிய பத்திரங்களில் பிரதி செய்பவரால் முன்னதாகவே தீட்டப்பட்டிருந்த முத்திரை சின்னத்தின் மீது சக்கரவர்த்தி தம் கைவண்ணத்தை சேர்த்திருக்கிறார்.

சுமேர் நாட்டு எழுத்தர்கள்

கிறிஸ்துவுக்கு முன்னால் மூன்றாம் ஆயிரவாண்டின் நடுவிலே சுமேர் நாடு முழுவதிலும் எழுத்துச் சாலைகள் நிறைந்திருந்தன. அந்தக் காலத்துச் சாசனங்களிலிருந்து எழுத்தர்கள் ஆயிரக்கணக்கில் இருந்தனர் என்பது தெரிய வருகிறது. எழுத்தர்களில் துவக்க நிலையில் உள்ளவர், 'உச்சி'யில் உள்ளவர், ஆலயத்தைச் சேர்ந்தோர், அரண்மனையைச் சேர்ந்த அரசாங்க எழுத்தர், இன்னும் ஆட்சித் துறையில் அந்தந்தப் பிரிவுகளில் பயிற்சி பெற்ற எழுத்தர் என்று பலர் இருந்தனர். அது ஆண்களின் தொழிலாகவே கருதப்பட்டது. சுமேர் நாட்டிலே அந்தத் தொழிலை மேற்கொள்பவர்களுக்கு மிகுந்த கௌரவமும் இருந்தது. இவ்விதம் எழுதுவதையே தொழிலாகக் கொண்டவர்களில் பலர் அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளை எட்டியிருக்கிறார்கள். சிறிது காலம் பொறுத்து, அஸ்ஸிரியர், பாபிலோனியர் காலத்தில் எழுத்துத் தொழிலில் பெண்களுக்கும் இடம் கிட்டியது.

ரெனே லபட்

புத்தகங்களைப்பற்றிய போர்

மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளுள் புத்தகமும் முக்கியமானது என்ற நிலை அலெக்ஸாந்திரிய சகாப்தம் தொடங்கிய சிறிது காலத்துக்குப் பிறகு, அதாவது கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் மத்தியிலே ஏற்பட்டது. அலெக்ஸாந்தருடைய வெற்றிகளால் கிட்டிய பலன்கள், பொதுவாகக் கலாசாரத்தின் முன்னேற்றம், மொழி இயல் பற்றிய பெரிய பள்ளிகளின் தோற்றம் ஆகியவற்றுடன் அது நெருக்கமாக இணைக்கப்பட்டது. அது ஒரு சகாப்தத்துக்கு, அதாவது புத்தக சகாப்தத்துக்கு ஆரம்பமாக அமைந்தது. அந்தச் சகாப்தம் பின்னால் மனித வாழ்க்கைக்கு ஒரு புதிய உருவம் கொடுத்தது. அதேசமயம் எழுதுவது, புத்தகத் தயாரிப்பு ஆகிய இரண்டுக்கும் உள்ள பிரச்சினைகள் ஓரளவு பிணைக்கப்பட்டனவாயின.

எழுதுவதிலும் புத்தகத் தயாரிப்பிலும் உள்ள பொதுவான பல அம்சங்களே அவற்றின் முன்னேற்றத்தை நிர்ணயித்தன. காகிதத் தயாரிப்பு விரிந்தது அவற்றுள் ஒன்றாகும். கிரேக்க இனத்தைச் சேராதவர்களும் கிரேக்க எழுத்துக்களை அதிக அளவில் உபயோகப் படுத்தியது மற்றொன்று ஆகும். உதாரணமாக, இன்றையப் பள்ளி மாணவன் அந்நியமொழி ஒன்றைக் கற்பது போல, அந்நாளிலே எகிப்தியர் கிரேக்க மொழியைக் கற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது. கிரேக்க நகரங்களுக்கிடையே இருந்த போட்டா போட்டியும் கலாசார வளர்ச்சிக்குக் கூடுதலான ஒரு தூண்டுதலாக அமைந்தது. அலெக்ஸாந்திரியாவுக்குப் போட்டியாகவும் பல சமயங்களில் அதை மிஞ்சியதாகவும் ஆசியா மைனரில் விளங்கிய பெர்கமம் என்னும் நகரத்தில் ஆட்டுத் தோலைப்

ஏதென்ஸ் நகரப் பிரமுகரான தெமிஸ்டோகிளிஸ் என்பவருடைய (கி. மு. 471) பெயரைத் தாங்கிய வோட்டுச் சீட்டு. அவரை நாடு கடத்திய போது இது உபயோகிக்கப்பெற்றது. கிரேக்க வழக்கத்தின்படி பானைக்கல்லி, ஓடு, ஒருவகைக் கிளிஞ்சல் ஆகியவற்றுள் ஏதோ ஒன்றை அத்தகைய காரியங்களுக்கு உபயோகப்படுத்துவர். நாடு கடத்தப்படுபவன் பெயர் அதிலே குறிக்கப்படும்.

புதிய எஸ்கிமோ எழுத்து

புராதனத் தோற்றம் கொண்டிருந்தாலும் இந்த எழுத்துக்கள் தற்காலத்தில் சிருஷ்டிக்கப்பட்டவை. கனடாவில் உள்ள எஸ்கிமோக்களின் உபயோகத்துக்காக எழுத்துக்கள் உண்டாக்கப்பட்டன. அவற்றின் பொருளும் தற்கால முறையிலேயே ஒலிக்கும்.



பதப்படுத்தி அதில் எழுதும் முறை கண்டு பிடிக்கப்பட்டது. அதனுல் அந்தப் பொருளுக்கே 'பெர்கமம்' என்ற பெயர் ஏற்பட்டது. இப்போது அது 'பார்ச்மெண்ட்' (தோற்காகிதம்) என்று வழங்கப்படுகிறது.

***

கி.பி. இரண்டாம் நூற்ருண்டின் ஆரம்பத்திலே புத்தகத் தயாரிப்பில் காகிதம் அல்லது பதனிடப்பட்ட தோல் ஆகிய இரண்டில் எதை உபயோகிப்பது என்பது பற்றியும், புத்தக அமைப்பில் 'வால்யூமென்' 'கோடக்ஸ்' என்ற இருமுறைகளில் எதைக் கொள்வது என்பது பற்றியும் தகராறுகள் தோன்றின. வால்யூமென் என்பதில், எழுதுவதற்கு உபயோகிக்கப்பட்ட காகிதம் நீண்ட சுருளாக அமைந்து ஒரு பக்கமே எழுதப்பட்டிருக்கும். 'கோடக்ஸ்' எனப்படும் முறையில் ஏட்டின் இருபுறமும் எழுதப்பட்டிருக்கும்; அளவுள்ள ஏடுகளாகத் தயாரிக்கப்பட்டு ஒழுங்கு படுத்தப்பட்டு அட்டையாலோ அல்லது உறையினுலோ கட்டப்பட்டிருக்கும். 'கோடக்ஸ்' முறை முக்கியமாகப் பதனிடப்பட்ட தோலை உபயோகித்துத் தயாரித்தது, கீழ்த்திசை நாடுகளைக் காட்டிலும் மேற்கு ஐரோப்பாவில் வளரத் தொடங்கியது.

அல்பான்ஸோ டெய்ன்

சீனர்களின் 'பிரபு' கலை

சீனர்களுடைய மிகப் பழமையான எழுத்தின் சம்பிரதாயமும் பாண்டித்யமும் கொண்ட அம்சங்களிலிருந்துஅந்த முறை ஒரு காலத்தில் குறிப்பிட்ட பெருமக்கள் அல்லது பிரமுகர்கள் ஆகியவர்களுக்கு மட்டுமே உரித்தான தாக ஜாக்கிரதையாகக் காப்பாற்றப் பெற்று வந்ததென்று தோன்றுகிறது.



ஒரு காலத்தில் எழுதுவதும் ஆறு கலைகளுள் ஒன்ருனதாக இருந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும். சடங்குகள், இசைக்கலை, வில்வித்தை, தேரோட்டுதல், எழுதுதல், எண்களைப் பற்றிய அறிவு (அதாவது வருவது உரைப்பதன் அடிப்படைத் தத்துவம்) என்ற ஆறுமே அவை. கன்பியூஷியஸ் சம்பிரதாயங்களின்படி, அந்த ஈடுபாடுகள் அனைத்தும் உயர்நிலை மக்கள் கல்விக்கு ஏற்றவையாக அமைந்தவை.

கிறிஸ்துவுக்கு முன்னுல் முதல் இரண்டு நூற்ருண்டுகளில் ஹான் சாம்ராஜ்யம் மிகுந்த செல்வாக்குடன் விளங்கியது. அதன் பலம் பெருகியதும், பிரமுகர்களின் நடைமுறைக்கான விதிகளும், புராதனச்சடங்குகளின் சம்பிரதாயங்களும் மறுபடியும் பழைய நிலைக்கே கொணரப்பட்டு, நாட்டின் நலனுக்காக அவற்றுக்குப் புதிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. இவ்விதம் எழுதுவது ஒரு சம்பிரதாயச் சடங்கு என்னும் கொள்கை ஆளும் வர்க்கத்தினரிடையே உருவாகியது. லட்சிய எழுத்து முறைகளுக்குச் சக்கரவர்த்தியே பாதுகாவலராகவும், தனி நீதிபதியாகவும் இருந்து வந்தார். எழுதுவதே அரசாங்க விஷயமாக ஆயிற்று. உயிர்வாழும் மக்கள் அனைவரையும் குறிக்கவும், அழைக்கவும் உபயோகப்படும் பல குறிகளின் தொகுப்பாக எழுதுவது கருதப்பட்டதாலும், ஒவ்வொருவனுக்கும் அவன் பெயரையும் இடத்தையும் அளிக்க வேண்டியது சக்கரவர்த்தியினுடைய முக்கிய பொறுப்பாக ஏற்கப்பட்டதால், எழுதும் முறையிலே அதை உபயோகிப்போர் எவ்வித மாறுதலையும் செய்ய முடியாது. சில குறிகளை நிராகரிக்கவோ புதியவற்றைப் புகுத்தவோ சக்கரவர்த்தி ஒருவரே அதிகாரம் பெற்றவர்.

ஜாக்ஸ் கெர்னெட்

சித்திர எழுத்துமுறை

சீன எழுத்து முறையிலிருந்து விரைவிலேயே பலதரப்பட்டதும் திறமை வாய்ந்ததுமான கலைத்துறை ஒன்று புதிதாகத் தோன்றியதற்கு அந்த எழுத்துக்களின் ஓவியச் செல்வமும் படாடோபமாக முறைப்படுத்தப் பெற்ற வடிவமுமே காரணம். மற்ற எந்த லிபிக்கும் இல்லாத வகையில் அதன் கவர்ச்சிகரமான அம்சங்களும் செயல்படும் முறைகளும் முன்னேற்றம் அடைந்திருந்தன. மாற்ற முடியாத வடிவங்களைக்கொண்ட எகிப்திய பொருள் வடிவ எழுத்துக்களையும், அரபு எழுத்துக்களையும் போலல்லாமல் வெறும் அழகு என்ற மதிப்பை மட்டும் அல்லாமல் கூடுதலாகவும் அது பெற்றிருந்தது. தன் உரிமையிலே அது ஒரு கலைத்துறையாகும்.

ஜாக்ஸ் கெர்னட்

ரோமன் அலங்காரம்

ரோமானியரின் பொற்காலமாகக் கருதப்படும் அகஸ்தஸ் காலத்தில் (கி.மு. 63 முதல் கி.பி. 14 வரை) நகர மாந்தர்களில் பலருக்குப் படிக்கத் தெரியும். ஆனுல் சிலருக்கே நூல் நிலையம் வைத்துக் கொள்ளும் வசதி இருந்தது. எனினும் அடிமைகளுக்கு அறிவு புகட்டுவதில் எழுத்துக்களைக் கற்றுக்கொடுப்பதும் முக்கியமானதாக இருந்ததெனத் தெரிவதால் தனி நபர்கள் பலர் புத்தகங்களைப் பிறரிடமிருந்து வாங்கி அவற்றைத் தங்கள் வீட்டிலேயே நகல் எடுத்து நூல் நிலையங்களை அமைத்துக்கொண்டனர்.

கி.பி. முதல் நூற்ருண்டின் மத்தியில் எழுத்து முறையினுல் ஏற்படும் நன்மைகளை மட்டும் கருதுவதோடு ரோமானியர் நின்றுவிடவில்லை. அதன் கவர்ச்சிகரமான தோற்றத்தால் அமையக் கூடியதைப் பற்றியும் கண்டனர். அதுகாறும் உருவங்களையும் கோலங்களையும் வரைந்து அலங்கரிக்கப்பட்டிருந்த தெருக்களிலே வர்ணம் தீட்டப்பட்ட எழுத்துக்களும் தோன்றின.

ராபர்ட் மரிசால்

ஆப்பிரிக்க லிபி

ஆப்பிரிக்காவில் காமரூன்ஸ் பகுதியில் பாமோன் என்னும் மக்களுடைய அரசன் என்ஜோயா 1899ல் ஒருவித எழுத்து முறையைத் தோற்றுவித்தான். செய்திகளை இரகசியமாக அனுப்புவதற்காகப் படங்களால் ஆன மொழியாக அது ஆரம்பத்தில் உபயோகப்படுத்தப்பட்டது. அந்தச் சித்திரங்களை ஒலிகளின் தொகுப்புக்கும் உபயோகிக்க முடியும் என்பதை அறிந்ததும் அரசன் அந்த முறையை அசைகளை உணர்த்தும் குறிகளாக மாற்றி, தன்னுடைய நாட்டில் உபயோகத்துக்குக் கொணர்ந்தான். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவன் அதையே நெடுங்கணக்கு முறையில் மாற்றினுன்.

—ஆல்ப்ரட் மெட்ராக்ஸ், *யுனெஸ்கோ கூரியர், 1950, நவம்பர்.*

பதினோரு நூற்றாண்டுகள் நிறைந்த ஸிரில் நெடுங்கணக்கு

யுனெஸ்கோ சில ஆண்டுகளுக்கு முன் ஸ்லாவ் அல்லது ஸிரில் எனப்படும் லிபியின் பதினொன்றாம் நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது. கி.பி. 863-ம் ஆண்டில்தான் மத்திய ஐரோப்பாவிலுள்ள மொராவியா நாட்டு மக்களிடையே மதப்பிரசாரம் செய்வதற்காகக் கிரேக்கப் பாதிரியார் ஸிரிலும் (அவருடைய உண்மையான பெயர் கான்ஸ்டன்டைன்) அவருடைய சகோதரர் மெதோடியஸூம் கான்ஸ்டான்டிநோபிளை விட்டுப் புறப்பட்டனர். அந்த மக்கள் நெடுங்கணக்கு ஏதும் இல்லாத ஸ்லாவ் மொழியைப் பேசி வந்தனர். அவர்கள் பேசும் மொழியிலேயே மதப்பிரசாரம் செய்வது அவர்கள் நோக்கம்.

ஆறாம் நூற்றாண்டிலேயே ஸ்லாவியர் பால்கன் பிரதேசங்கள் மீது படையெடுத்து வந்து ஸலோனிகாவைச் சுற்றிய இடங்களிலும், ஏஜியன் கடற்கரையிலும் குடியேறி இருந்தனர். ஏஜியன் கடற்கரைப் பிரதேசத்திலே கிரேக்க மொழியைப் போலவே ஸ்லாவ் மொழியும் அதிகம் பேசப்பட்டு வந்தது. இன்று உள்ளது போலப் பல தனிமொழிகளாக அப்போது ஸ்லாவ் பிரிந்து விடவில்லை. மொராவிய மக்களில் ஒரு பகுதியினரும் ஏற்கனவே கிறிஸ்தவ மதத்தைத் தழுவியிருந்தனர். ஆகவே, ஏஜியன் கடற்கரைப் பக்கத்தில் பழக்கத்திலிருந்த மொழி பேசிய ஸிரில் கூறியதை மக்களால் புரிந்து கொள்ள முடிந்தது.

அந்தக் காலத்தில் பிரபல சிந்தனையாளர்களில் ஒருவரான ஸிரில் பைஜண்டியம் அதாவது கான்டான்டிநோபிலில் வசித்துவந்த சிறந்த கிரேக்க அறிஞர்களிடம் பயிற்சி பெற்றவர். ஸ்லாவ் மொழி தொன்மையானது. அதன் ஒலி அமைப்பு சிக்கலானது. அதைத் துல்லியமாகவும் தெளிவாகவும் எடுத்துக்காட்டி எழுதுவதற்கு அந்தக் காலத்தில் வழங்கி வந்த வேறு எந்த நெடுங்கணக்கையும் உபயோகிக்க முடியாமல் இருந்தது. எனவே அவர் புதிதாக ஒரு நெடுங்கணக்கையும் அந்த எழுத்துக்களின் வரி வடிவங்களையும் உண்டாக்கினார். ஸ்லாவ் மொழியில் 'சொல்' என்பதை உணர்த்தும் 'க்ளாகோல்' என்பதைக் கொண்டு 'க்ளாகோலிதிக்' முறை என்று அது அழைக்கப்பட்டது.

கிரேக்கம், லத்தீன், ஹீப்ரு ஆகிய மூன்று மொழிகளை மட்டுமே ஏற்றுக் கொண்டிருந்த ஜெர்மானிய லத்தீன் மதபோதகர்கள் அதைப் பெரிதும் எதிர்த்தனர். எனினும் ஸிரில் தம்முடைய முயற்சியை விடாமல் தொடர்ந்து

பல்கேரியத் தலைநகரான ஸோபியாவில் தெருக்கள் வழியே ஸிரில் எழுத்துக்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகின்றன. ஒன்பதாம் நூற்றாண்டில் முதன் முதலாக ஸ்லாவ் லிபியைத்

பழமையான ஸ்லாவ் லிபியில் இந்தக் கல்லிலே பொறிக்கப்பட்டுள்ள சாசனம் பதினொன்று அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. ருமேனியாவில் துல்ஸியா எனப்படும் இடத்தில் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. பத்தாம் நூற்றாண்டின் கடைசியில் பல்கேரியாவில் இறுதியான வடிவைப் பெற்றுப்பின்னர், ஸிரில் லிபி எவ்வாறு மற்ற நாடுகளுக்குப் பரவியது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

Bucharest Museum of Antiquities



Historical Museum, Moscow

ஸிரில் லிபியில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வெளியிடப்பெற்ற சுவிசேஷப் பிரார்த்தனைப் புத்தகத்தின்

Willy Pragher, Fribourg

தோற்றுவித்த ஸிரில், மெத்தோடியஸ் ஆகிய இருவருடைய விழாவைப் பல்கேரிய மக்கள் பத்தொன்பதாம் நூற்றுண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாடுகின்றனர்.

நடத்தி வந்தார். கி.பி. 869-ல் அவர் மரணத்துக்குப் பிறகு அவர் சகோதரர் மெதோடியஸ் அந்தப் பணியை மேற்கொண்டார்.

பின்னுல், ஸிரில் மெத்தோடியஸ் ஆகியோருடைய சீடர்கள் சமய விரோதிகள் எனக் குற்றம் சாட்டப்பட்டு மொராவியாவிலிருந்து விரட்டப் பட்டார்கள். ஸ்லாவ் நாடான பல்கேரியா அவர்களுக்குப் புகலிடம் அளித்தது.

பல்கேரியாவில் கிரேக்க மொழி ஒன்றுதான் வழக்கில் இருந்து வந்தது. இப்போது மொராவியாவிலிருந்து கொணரப்பட்ட புதிய லிபியைச் சிறிது மாற்றியமைத்து பல்கேரியர் ஏற்றுக்கொண்டனர். க்ளாகோலிதிக் எழுத்துக் களின் வடிவங்களிலே கண்ட வளைவுகளையும் வட்டங்களையும் மாற்றி அவற்றுக்குப் பதிலாக கிரேக்க எழுத்துக்களில் உள்ளது போன்ற தெளிவான சுலபமான வடிவங்களை அமைத்தார்கள்.

இவ்வாருக கி.பி. 940-ம் ஆண்டளவில், முதன் முதலாக ஸ்லாவ் லிபியான க்ளாகோலிதிக் முறை தோன்றியதற்கு எண்பது வருஷங்களுக்குப் பிறகு முற்றிலும் மாற்றியமைக்கப்பட்ட முறையில் புதிய ஸிரில் லிபி உண்டாயிற்று. ஒன்பதாம் நூற்றுண்டின் பல்கேரிய இலக்கியங்கள் ஸிரில், மெதோடியஸ் ஆகியோருடைய உழைப்பின் நேரடிப் பயனுகத் தோன்றியனவே. பத்து வருடங்களுக்கு முன் கிழக்குப் பல்கேரியாவில் கண்டுபிடிக்கப்பட்ட மோஸ்திக் கல்வெட்டைப் போன்று பழமையான பல்கேரியச் சாசனங்களும் பத்தாம் நூற்றுண்டில் இருந்த ஸிரில் எழுத்துக்களின் வடிவத்தை காட்டுவன.

எனினும் ஸிரில் லிபி இன்னும் பெரும் அளவில் பரவ வேண்டியிருந்தது. பல்கேரியாவிலும் மாஸிடோனியாவிலும் நன்கு வேருன்றிய பிறகு இது ஸெர்பியா, பாஸ்னியா நாடுகளில் பரவியது; எல்லாவற்றுக்கும் மேலாக 988-ல் ருஷ்யா கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றத் துவங்கிய பிறகு அந்த நாட்டிலும் பரவியது. பத்தொன்பதாம் நூற்றுண்டில் ருமேனியாவில் வழங்கி வந்த ஸிரில் லிபி முறை ரோமன் முறைக்கு மாற்றப்பட்டது.

இன்றைய ஸ்லாவ் மொழிகளுக்கேற்பச் சிறு சிறு மாற்றங்களை மட்டுமே கொண்டு ஸிரில் லிபி பத்தாம் நூற்றுண்டில் அது தோற்றுவிக்கப்பட்ட வடிவத்தையே இன்னமும் கொண்டிருக்கிறது.



ஒரு பக்கம். ஸிரில் சிருஷ்டித்த ஸ்லாவ் லிபிக்குப் பல்கேரியர் கிரேக்க எழுத்து வடிவம் கொடுத்துள்ளனர்.

மர்மம் சூழ்ந்த எழுத்து முறைகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடந்த தொல் பொருள் ஆராய்ச்சியின் முன்னேற்றத்தில் பழமையான மொழிகள் பலவற்றை வெளிப்படுத்தி விளக்கிக் கூறியதே தலைசிறந்த அம்சம் ஆகும். அந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்த நிலையிலே, மனிதன் முதல் முதல் உபயோகித்த லிபிகளில் ஒன்றான எகிப்திய பொருள்வடிவ எழுத்துக்களில் ஓர் எழுத்தைக்கூட வாசிக்க முடியவில்லை. எனினும் இருபத்திரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, இரகசியம் வெளிப்பட்டு, அவற்றை வாசிக்கும் முறையை அறிந்ததும், மூவாயிரம் ஆண்டுக்கான மக்களின் நாகரிகம் பற்றிய சாசனங்களைச் சுலபமாக வாசிக்க முடிகிறது. சுமேரியர், பாபிலோனியர், அஸிரியர் ஆகியோரால் எழுதப் பட்டு வந்த ஆப்புவடிவ எழுத்துக்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் படிக்கப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் மேலும் இரண்டு ஆப்பு எழுத்து முறைகளும்

படிக்கப்படாத

கிரீட் தீவில் பைஸ்டோஸ் என்னும் இடத்தின் அருகிலுள்ள ஹகியா த்ரியடா என்ற ஊரில் பணிபுரிந்து வந்த இத்தாலியத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் குழு 1908ஆம் ஆண்டில் புதிய எழுத்துமுறை ஒன்றை வெளிக் கொணர்ந்தது. அந்த ஒன்றைத் தவிர அந்த முறையில் எழுதப் பட்டது வேறு எதுவும் இதுகாறும் கிடைக்கவில்லை. ஆறரை அங்குலம் குறுக்களவுள்ள வட்டமான சுட்ட மண் தட்டிலே பொறிக்கப் பட்டுள்ளன அந்த எழுத்துக்கள். மினோவா அரண்மனையைச் சேர்ந்த வெளிக் கட்டிடம் ஒன்றில் அது கிடைத்தது. கி.மு. 1700-ம் ஆண்டைச் சேர்ந்த கிரீட் 'ஏ' வகைக்கோடு—எழுத்துக்களைச் சேர்ந்த லிபியில் எழுதப்பட்ட உடைந்த பலகை ஒன்றும் அதன் அருகிலேயே கிடைத்துள்ளது.

தட்டின் இரு புறங்களிலும் காணும் பொருள் வடிவ எழுத்துக்கள் இதுவரை வேறு எங்கும் கிடைக்காதவை. அவை மையத்திலிருந்து சுற்றிச் சுற்றி வரிசையாக வெளியே வருவது போன்று வட்டத்தின் விளிம்பு வரை பொறிக்கப்பட்டுள்ளன. (மையத்திலிருந்து வெளியே வருவதாகக் கொள்ளாமல் வெளியிலிருந்து சுற்றிச் சுற்றி மையத்தை அடைவதுபோலவும் கொள்ளலாம்). அதிலே மொத்தம் 241 வெவ்வேறு குறிகள் காணப் படுகின்றன. அவை 67 தொகுதிகளாக அமைந்துள்ளன. ஒவ்வொரு தொகுதியும் ஒரு சொல்லாகவோ அல்லது வாக்கியமாகவோ இருத்தல் கூடும். ஒவ்வொரு தொகுதியும் அடுத்ததிலிருந்து செங்குத்தான கோடுகளால் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. அவற்றை

கிரீட்டிலுள்ள மினோவா அரண்மனையின் வெளிக் கட்டிடம் ஒன்றில் கிடைத்த இந்த மண் தட்டு இன்னும் அறிய முடியாத சித்திர எழுத்துக்களால் சுற்றிச் சுற்றிவரும் வரிசையில் எழுதப்பட்டுள்ளது. இதிலுள்ள குறிகள் தனித் தனி அச்சுக்களால் பொறிக்கப்பட்டிருக்கலாம். இது கி. மு. 1700-ஆம் ஆண்டைச் சார்ந்ததாகும்.

Editions Arthaud Paris-
C Michel Audrain

(ஸிரியாவிலுள்ள ராஸ் ஷாம்ராவில் கிடைத்த கரிடிக் எழுத்து முறையும் ஹிட்டைட்டுகளின் எழுத்து முறையும் அவை இரண்டும்) ஹிட்டைட் பொருள்வடிவ எழுத்துக்களும் படிக்கப்பட்டன. 1953-ம் ஆண்டில் 'பி' வகை கோடு எழுத்து என்னும் மினோவா எழுத்துக்கள் படிக்கப்பட்டன. மின்சாரக் கம்ப்யூடர்களை உபயோகித்து மாயா சித்திர எழுத்துக்களைப் படிப்பதற்குச் சமீபத்தில் முயற்சிகள் நடந்தன. (யுனெஸ்கோ கூரியர், 1962-ம் ஆண்டு மார்ச் இதழ் பார்க்கவும்). மீதமுள்ள 'மர்ம' மொழிகளும் தற்காலத்தில் உள்ள விஞ்ஞான சாதனங்களைக் கொண்டு ஒரு நாள் படிக்கப்பட்டு விடும் என்பதை எதிர்பார்க்கலாம். இவ்விதம் இதுவரை இன்னமும் படிக்கப்படாமல் உள்ள மொழிகளுள் முக்கியமான ஐந்து லிபிகளை விவரித்திருக்கிறோம்.

—ஆர். ஜே. ஸ்பெக்டர்.

பைஸ்டோஸ் தட்டு

அந்தத் தட்டிலே அச்சிடுவதற்கு மரத்திலும் உலோகத்திலும் செய்யப்பெற்ற 45 அச்சுகளை உபயோகித்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. அந்த எழுத்துக்கள் அசைகளின் குறிகளாக இருத்தல் வேண்டும் என்று கருதப்படுகிறது. அவற்றின் தொகை மிகவும் குறைவாக இருப்பதால் ஓவிய எழுத்துக்களாகக் கொள்ள முடியாது. நெடுங்கணக்காகக் கொள்வதற்கு அதிகம்.

ஆரம்பம் முதலே அறிஞர்களும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் அதில் எழுதியிருப்பதை அறிந்து கொள்வதற்கு முயன்று வருகிறார்கள். 'ரோஸெட்டா' கல்லில் கண்டதைப் போல இரு மொழி விளக்கம் கொண்டதாக அது இல்லாததால் அதனை அறிவதற்கு அந்தச் சாசனத்தில் கிடைக்கும் சான்றுகளைக் கொண்டே முயலவேண்டியிருக்கிறது. பல குறிகளிலும் காணப்படும் போர் வீரர் அம்சங்களைக் கொண்டு அது வெற்றிப் பாடலின் ஒரு பாடமாக இருக்க வேண்டும் என்றும், ஆசியாமைனரின் தென்மேற்குக் கடற்கரையிலிருந்து வந்திருக்கக் கூடும் என்றும் ஸர் ஆர்தர் இவான்ஸ் என்பவர் கருதுகிறார்.

எந்த மொழியில் இந்தத் தட்டு எழுதப்பட்டுள்ளது என்பதை அறியமுடியாததே பெரும் கஷ்டமாக உள்ளது. பிலிஸ்தியன், லைசிய, காரிய, கிரேக்க, சைப்ரஸ், லிபிய, அனதோலிய, ஸெமிதிக் மொழிகளில் ஏதோ ஒன்றில் எழுதப்பட்டதென்று பலவிதமான அபிப்பிராயங்கள் நிலவி வருகின்றன. மேலும், இது வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாக எழுதப்பட்டிருக்கிறதா அல்லது இடது பக்கத்திலிருந்து வலது பக்கமாக எழுதப்பட்டிருக்கிறதா என்பதும் விளங்கவில்லை. மினோவா, 'பி' வகைக்கோடு எழுத்துக்களைப் படித்த மைக்கேல் வென்ட்ரிஸ் என்பவரோடு சேர்ந்து உழைத்தவரும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவருமான ஜே. சாட்விக் என்பவர் பிந்தைய கருத்தையே கொண்டுள்ளார். அச்சுக்கள் உபயோகிக்கப்பட்டிருப்பதை அவர் குறிப்பிட்டு, பிற்காலத்தில் அச்சுக்களும் செதுக்கு வார்ப்புகளும் தோன்றுவதை எடுத்துக்காட்டும் முன்னோடிகளாக அவற்றைக் கொள்ளலாம் என்று வர்ணித்தார். மேலும் அவர் சுட்டிக் காட்டியபடியே அந்த தட்டைத் தயாரிப்பதற்காகவே அதற்கு உபயோகிக்கப்பட்ட நாற்பத்தைந்து அச்சுக்களையும் செய்திருக்க மாட்டார்கள் அல்லவா?

1931-ம் ஆண்டில் ஆங்கில ஆராய்ச்சியாளர் ஒருவர் அதைக் கிரேக்க மொழியாகவே கொண்டு படிக்க முயன்றார். ஒவ்வொரு குறிக்கும் ஒரு ஒலி வடிவம் கொடுத்து ஒவ்வொரு தொகுதியும் ஒரு தொடரைக் குறிப்பதாகக் கொண்டார். இந்த விதமாக ஐந்து குறிகளைக் கொண்ட தொகுதியை அவர் 'அன்'' -ஸ, -கோ-, தே-, ரே எனப் படித்து அதை மேலும் 'அனு', ஸவோ, கொவோதிய, ரே என்று விரித்துக் காட்டினார். பின்னர் அதை 'எழு, ரட்சகனே!, கேள், பெண் தெய்வம், ரே!' என மொழி பெயர்த்தார்.

சிந்துவெளி முத்திரைகள்

(பாகிஸ்தானிலுள்ள) சிந்துவெளிப் பிரதேசத்திலிருந்து புதிராக விளங்கும் எழுத்துக்கள் கிடைத்துள்ளன. அவற்றுக்கு ஏராளமான மாதிரிகள் உள்ளன. அவை ஆரியர் படையெடுப்புக்குமுன், அதாவது கிறிஸ்துவுக்கு இரண்டு அல்லது மூன்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை. பஞ்சாபிலுள்ள மொஹஞ்சதரோ, சிந்துவிலுள்ள ஹரப்பா போன்ற இடங்களில் முன்னுளில் விளங்கி மறைந்துபோன பெரிய நகரங்கள், மற்றும் சில சிறிய பட்டணங்கள் ஆகியவற்றை அகழ்ந்து பார்த்தபோது கிடைத்தனவே அவை. கல், செம்பு, அல்லது தந்தத்தாலான முத்திரைகளாகவும் தாயத்து போன்ற அணிகளாகவும் காணப்படுகின்றன.

இந்த எழுத்துக்களைப் படிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் பயனற்றுப் போயின. அதிலே ஆளப்பட்ட குறிகள் 250 முதல் 400 வரையில் இருப்பதாகத் தெரிகிறது. முன்னூறு குறிகள் இருப்பதாகக் கொண்டாலும் இந்த முறை நெடுங்கணக்கைச் சார்ந்ததாகவோ அல்லது தனி அசை ஒலிக்கு அமைந்த குறிகளைக் கொண்டதாகவோ, அல்லது பொருள்களையும் இயல்களையும் தெரிவிக்கும் கருத்துக்குறியீடுகளாகவோ கொள்ள முடியாது.



இடது பக்கத்தில் காணும் சிந்து வெளி எழுத்துக்கும் வலது புறத்திலே காணும் ஈஸ்டர்த்தீவு எழுத்துக்கும் உள்ள தெளிவான ஒற்றுமை காரணமாகச் சில ஆசிரியர்கள் இரு இடங்களும் தூரத்தில் இருந்தாலும் இரு எழுத்துக்களுக்கும் சம்பந்தம் காண முயன்றுள்ளனர்.

From "The Alphabet" by David Diringer, London, 1949

ஆகவே, இது ஒரு பகுதி கருத்துக் குறியீடுகளாகவும் மற்றொரு பகுதி ஒலிக் குறிகளைக் கொண்டதாகவும் அமைந்தது எனலாம். 'பி' வகைக்கோடு எழுத்து எனக் குறிக்கப்பெறுவது, எகிப்தியச் சித்திர எழுத்துமுறை ஆகியவற்றில் உள்ளபடி இலக்கண முடிவுக் குறிகள் சிலவற்றையும் கொண்டதாகவும் கொள்ளலாம். எழுத்துக்களை உடையனவாகக் கிடைத்தவற்றுள் பெரும்பகுதி முத்திரைகளாகவோ அணிவகையாகவோ இருப்பதால் அந்தக் குறிகள் பெரும்பாலும் இயற்பெயர்களாக இருத்தல்கூடும்.

பழமையான ஹிட்டைட் எழுத்து முறையுடனே அல்லது பழமையான எலமைட் எழுத்து முறையுடனே இது தொடர்பு கொண்டதாக இருக்கும் என்று ஆராய்ச்சியாளர் கூறியிருக்கின்றனர். அராமிக் முறையிலிருந்து வந்ததாக இப்போது கருதப்படும் பிராமி எழுத்துக்களோடு இது தொடர்பு கொண்டதென செக்கோஸ்லோவாகியா நாட்டைச் சேர்ந்த பிரபல ஹிட்டைட் மொழி ஆராய்ச்சியாளர் பி. ஹ்ராஜ்னி என்பவர் கூறுகிறார். அந்த எழுத்துக்களை ஒலிக்குறிகள் அல்லது அசைக் குறிகளாகக் கொண்டு தென்னிந்தியாவின் திராவிட இன மொழிகளுக்கு ஆதாரமாக இருந்த ஏதோ ஒரு மொழியை உணர்த்துவனவாக ஹிராஸ் பாதிரியார் கூறியிருக்கிறார்.



From H. D. Die Schrift

கிரீட்டிலிருந்து கிடைத்து இன்னமும் படிக்க முடியாத 'ஏ' வகைக்கோடு எழுத்து முறையின் குறிகள். கி. மு. 1750-ஆம் ஆண்டைச் சேர்ந்ததான இந்த முறை எழுத்துக்கள் கட்டிடங்களிலும், மண்ணுலான பொருள்களிலும் காணப்படுகின்றன.

கிரீட் தீவுச் சின்னங்களில் காணும் பாடங்கள்

எட்ருஸ்கன் பாடங்களை வாசிப்பதற்காக நீண்டகாலமாகச் செய்த முயற்சிகளால் அநேக யூகங்கள் தோன்றியுள்ளன. அந்த மொழி கிரீட் தீவோடு தொடர்பு கொண்டதாக இருக்கும் என்பதும் அவற்றுள் ஒன்றாகும்.

ஆங்கில மொழி ஆராய்ச்சியாளர் மைக்கேல் வென்ட்ரிஸ் என்பவர் மினேவா 'பி' வகைக்கோடு—எழுத்து முறையோடு எட்ருஸ்கன் முறை தொடர்பு கொண்டதாக இருக்கும் என்ற அந்த எண்ணத்தை அடியோடு உதறிவிட்டு கிரேக்க மொழியைக் கொண்டு ஆராயப் புகுந்த பின்னரே அவர் அதை வாசிப்பதில் வெற்றி கண்டார்.

கிரீட் பொருள் வடிவ எழுத்துக்களிலிருந்து தோன்றிய 'ஏ' வகைக் கோடு எழுத்து என்ற எழுத்துக்கள் கற்கட்டிடங்களிலும், மண்ணுல் ஆன பொருள்களிலும் காணப்பட்டன. மசியால் எழுதப்பட்ட மாதிரிகளும் கிடைத்துள்ளன. 'பி' வகைக்கோடு எழுத்து போல அல்லாமல், அது கிரீட்டுக்கு வெளியே கிடைப்பதில்லை. அந்த வகையில் எண்பத்தைந்து குறிகளும் வேறு சில சித்திர உருவங்களும் உள்ளன. கிரீட் தீவில் வசித்த பூர்வீக மக்கள் பேசி வந்த கிரேக்கமல்லாத ஒரு மொழியில் அவை அமைந்துள்ளன. உண்மையில் 'பி' வகைக்கோடு—எழுத்துக்களின் மொழியான மைசினீயன் கிரேக்கம் 'ஏ' வகைக்கோடு—எழுத்துக்கு ஒரு சிறிதும் பொருத்தமாக இல்லை. முக்கியமாக 'ஏ' வகைக்கோடு எழுத்து கிரேக்க முறையைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்ற எண்ணத்தை வென்ட்ரிஸுடன் ஆராய்ந்த ஜே. சாட்விக் நிராகரித்தார். ஸெமிதிக் மொழிகளில் ஆராய்ச்சிசெய்தஅமெரிக்கநிபுணர் டாக்டர் வி கார்டன் அந்த முறையை பாபிலோனிய—அக்காடியன் முறைக்கு ஒத்ததாகக் கருதினார். பேராசிரியர் டேவிஸ் என்பவரும் ஸெமிதிக் சார்பு உள்ளது என்று கூறினார். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் எல். பாமரும் மற்றவர்களும் கிரேக்க மொழி அல்லாத இந்தோ—ஐரோப்பிய மொழிகளில் ஒன்றாக இருக்கலாமென்றும். ஹிட்டைட் மற்றும் பழங்கால அனதோலிய மொழிகளுடன் அந்த முறை தொடர்பு கொண்டிருக்கலாம் என்றும் கூறி உள்ளார்கள்.

1955 மார்ச்-ஏப்ரல் யுனெஸ்கோ கூரியர் "நான்கு கைப்பிடிகளுள்ள ஜாடிகளின் விவரம்" கட்டுரையைப் பார்க்க.

ஈஸ்டர் தீவின் பேசும் மரக்கட்டைகள்

பசிபிக் மகா சமுத்திரத்தில் சிலி நாட்டுக்கு இரண்டாயிரத்து ஐநூறு மைல்கள் மேற்கே உள்ளது ஈஸ்டர்தீவு. ஓவிய எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட மரக்கட்டைகள் இங்கே கிடைப்பது பிரசித்தமானது. இது வரையில் அவ்வகையில் மொத்தம் பதினைந்து கிடைத்துள்ளன. ஆறு அடிவரை பல அளவுகளில் உள்ள அவை 'பேசும் மரக்கட்டைகள்' என்று பொருள் பட 'கோஹவ் ரொங்கோ-ரொங்கோ' எனக் குறிப்பிடப்படுகிறது.

மொத்தத்தில் இந்த முறையில் ஐநூறு குறிகள் உள்ளன. அந்தக் குறிகள் வரிவரியாகத் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன. ஆனால் அந்த வரிகளோ பாம்பைப் போல வளைந்து வளைந்து உள்ளன. ஒரு வரி முடிந்து அடுத்த வரிக்கு வரும்போது குறிகள் தலைகீழாக இருப்பதால் கட்டையைத் திருப்பி வைத்துக் கொண்டே படிக்க வேண்டும்.

ஹங்கேரிய நாட்டு அறிஞரான ஜி.டி ஹெவெஸி குறிப்பிட்டுள்ளது போல் அநேக வடிவங்கள் சிந்து வெளி எழுத்துக்களைப் போன்று வெளித் தோற்றத்தைக் கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த ஒற்றுமை பரிமாணத்தை மாற்றியோ விவரமாகக் காணும் பகுதிகளை அழித்தோ சிறிய மாறுதல்களைச் செய்ததாலேயோ ஏற்பட்டது என்றும் உருவங்களுக்கு ஏற்ப ஒலிவடிவின் ஒற்றுமை இருந்ததென்பதை அறி

பொருள் விளங்காத

ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் இத்தாலியிலுள்ள பெருகியா அருகே குப்பியோவில் சில வடிவங்கள் பொறிக்கப்பட்ட சாசனங்கள் கிடைத்தது முதல் பழைய கால எழுத்துக்களைப் படிக்கும் முயற்சியும் ஆரம்பமாகிவிட்டது. இகுவியம் என்ற பழங்கால பிரதேசத்தில் கிடைத்ததால் இகு



From "The Alphabet," by David Diringer, London, 1949

இத்தாலியிலுள்ள பியாசென்ஸா என்னுமிடத்தில் கிடைத்தது. எட்ருஸ்கன் மக்களால் வெண்கலத்தில் செய்யப்பட்ட கன்றுக்குட்டியின் ஈரலைப்போன்ற மாதிரி. இதன் மீது அவர்களுடைய தேவதைகளின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

விக்கக் கூடிய ஆதாரம் ஏதும் இல்லை யென்றும் காலஞ் சென்ற மனித இயல் நிபுணர் ஆல்ஃப்ரட் மெட்ராக்ஸ் கூறியுள்ளார். சமீபத்தில் ஜெர்மானிய மனித இயல் நிபுணர் தாமஸ் பார்தெல் என்பவர் மேற்கொண்ட முயற்சியிலிருந்து அது பாலினேஷியன் மொழியைச் சேர்ந்தது என்றும் அத்தீவு வாசிகள் ரங்கதியா என்னும் தீவிலிருந்து வந்தவர்கள் என்றும் தெரியவருவதாகக் கூறப்படுகிறது.

C Musée de l'Homme, Paris

ஓவிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு, பசிபிக்கிலுள்ள ஈஸ்டர்தீவில் கிடைத்த சாசனங்கள், மற்றப் பொருள்கள் ஆகியவற்றுள் ஒன்ருன மீன் உருவம் கொண்ட மரக் கட்டை. இந்தச் சித்திர எழுத்துக்கள் சுருமீனின் பல்லால் பொறிக்கப்பட்டுள்ளன.

எட்ருஸ்கன் வடிவங்கள்

வைன் சாசனப் பலகைகள் என்று அவை புகழ்பெற்றுள்ளன. அவை கிரேக்க லிபியை மாதிரியாகக் கொண்டு எட்ருஸ்கன் என்ற மக்களால் தயாரிக்கப்பட்ட ஏழு எழுத்து முறையால் பொறிக்கப்பட்டவை.

உண்மையில் இகுவைன் பலகைகளில் பெரும்பகுதி லத்தீன் இனத்தைச் சேர்ந்த உம்ப்ரியன் மொழியில் எட்ருஸ்கன் முறையிலிருந்து தோன்றிய ஒருவகை எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

அடுத்த நூற்ருண்டுகளில் அந்த லிபியைப் படிக்கும் முயற்சி மெதுவாகவும் ஆனல் நிலையான முன்னேற்றமும் அடைந்து 1880-ல் கடைசியாக எஞ்சி நின்ற எழுத்தை நிச்சயித்ததும் அது உச்சக் கட்டத்தை அடைந்தது.

ஏறக்குறைய ஆயிரம் சாசனங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் பெரும்பகுதி சிறிய மரண அறிவிப்புக்களே. பெயரையும் வம்சக் குறிப்புகளையும் தவிர அதிகமாக ஏதுமில்லை.

அதிக விவரங்களைக் கொண்ட சாசனங்களுள் பின்வரும் மூன்றைக் குறிப்பிடலாம். 300 சொற்கள் கொண்ட ஒரு களிமண் பலகை, எட்ருஸ்கன் தேவதைகளுடைய பெயர்களைப் பொறித்துள்ள கன்றுக்குட்டியின் ஈரல் மாதிரி செய்யப்பட்ட வெண்கல உருவம், துணியிலே எழுதப்பட்ட ஒரு சாசனம். அந்தத்துணி முதலில் சுருளாக இருந்து பின்னர் துண்டுகளாக வெட்டப்பட்டு, கிரேக்க ரோமானிய காலத்தைச் சேர்ந்த எகிப்தியப் பெண் ஒருத்தியின் பிணத்தின் மீது சுற்ற உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது ஜாக்கரப் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ள அது ஐயாயிரம் சொற்களுக்கும் மேலாகக் கொண்டுள்ளது.

நன்கு உதவி அளிக்கக்கூடிய இரு மொழிச் சாசனங்கள் ஏதும் கிடைக்காததால் ஆராய்ச்சியாளர்கள் அவற்றில் காண்பவற்றையே ஆதாரமாகக் கொள்ளவேண்டியிருக்கிறது. மரண அறிவிப்புகள் திரும்பத் திரும்ப அதே குறிகளைக் கொண்டு அமைந்திருப்பதால் அம்முயற்சிக்கு நல்ல முறையில் உதவியிருக்கின்றன. பிரபல எட்ருஸ்கன் ஆராய்ச்சியாளர் பேராசிரியர் பல்லோத்திேே அவ்விதம் திரும்ப திரும்ப வரும் சொற்களுள் சுமார் நூறு சொற்களைத் தொகுத்து அவற்றுக்கும் பொருள் கண்டு பிடித்திருக்கிருர்.

எண்களிலே முதல் ஆறுக்கு இப்போது எட்ருஸ்கன் மொழியில் சொற்கள் நமக்குத் தெரிய வந்துள்ளன. இருப்பினும் அவை எந்த வரிசையில் அமைந்திருந்தன என்பது விளங்கவில்லை. மச், ஜல், து, ஹுத், சி, ஸ என்பவையே அவை. பின்வரும் சாசனத்தை மாதிரிக்குக் காட்டலாம். ''லார்த் அலெத்நஸ் அருந்தல் ருவ்ஃப்யால்க் க்ளான் அவில்ஸ்ட லுபுசே.'' அது லர்த் (லதீன் மொழியில் லர்ஸ்) ஆலெத்நஸ் அருன், ருப்பி ஆகியோருடைய மகன் அறுபது வயதில் இறந்தான் என்று பொருள்படும். நமக்குத் தெரிந்த வேறு எந்த மொழி போலவும், முக்கியமாக இந்தோ-ஐரோப்பிய மொழிகளைப்போல இந்த விசித்திரமான மொழி இல்லை என்பது தெளிவு. எட்ருஸ்கர்கள் கீழ்த்திசை நாடு ஒன்றிலிருந்து கடல் வழியாகக் கிறிஸ்துவுக்கு முன்னல் முதல் ஆயிரம் ஆண்டின் ஆரம்ப வருடங்களில் இத்தாலியை அடைந்திருக்க வேண்டும் என்று ஹெரோடோடஸ் என்னும் அறிஞர் கருதியதை ஆராய்ச்சி நிபுணர்கள் பலர் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

மேலே உள்ள சீன எழுத்து ''பெண்'' என்பதைக் குறிக்கும், ''நூ'' என்று உச்சரிக்கப்படும். கீழே உள்ளது ''ஒரு குழந்தை'' என்பதைக் குறிக்கும்; ''த்ஸு'' என்று உச்சரிக்கப்படும், இந்த இரண்டு எழுத்துக்களையும் சேர்த்து எழுதினால் அது ''ஹவோ'' என்று உச்சரிக்கப்படுவதோடு ''நல்லது'', ''சிறந்தது'' என்று பொருளைக் கொடுக்கும். விரிவான பொருளில் ''சிநேகம்'' என்றும் குறிக்கப்படும். இவ்விதமாக, தனித்தனியான ஒலிக்குறியையும் பொருளையும் கொண்ட இரண்டு எழுத்துக்களை ஒன்றாகச் சேர்த்து எழுதி உருவம் இல்லாத உணர்ச்சி பண்பு எண்ணம் முதலியவற்றைக் குறிப்பிட முடிகிறது.





சீனக் குறிகளின் திறவு கோல்

சீன எழுத்து முறையில் ஒரே குறி பல பொருள்களைக் கொடுப்பதாக இருக்கும். அவற்றை வேறுபடுத்திக்காட்ட அந்தக் குறியுடன் எண்ணத்தை உணர்த்தக்கூடிய சிறுகுறியும் சேர்க்கப்படும். ''திறவுகோல்'' போன்ற இந்தக் குறி எழுத்துடன் சேர்ந்ததேயாயினும் தனியாக உச்சரிப்பில் சேருவதில்லை. இடது பக்கம் இதற்கான உதாரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ''ஸங்'' என்று உச்சரிக்கப்படும் மூன்றாவதான எழுத்து மல்பரி முசுக்கட்டைச்செடி என்று பொருள்படும். இது முதல் இரண்டு எழுத்துக்களின் சேர்க்கை. முதலாவது ''ய'' எனப்படுவது. ஆரம்பத்தில் அது கை என்று பொருள் பட்டு வந்தது. இரண்டாவது ''மூ'' என்பது மரம் அல்லது மரக்கட்டை எனப் பொருள்படும். இவ்விரண்டும் சேர்ந்த உருவத்திலே இரண்டாவது குறியே பொருளை உணர்த்தும் ''திறவு கோல்'' ஆகும். நான்காம் எழுத்தும் ''ஸங்'' என்ற சொல்லே. ஆனால் அது ''தொண்டை'' என்ற பொருளைக் கொடுப்பது. ''வாய்'' என்ற பொருளைக் கொடுக்கும். ''கு'' அல்லது ''கௌ'' என்ற ஐந்தாம் குறி திறவு கோலாகச் சேர்க்கப்பட்டிருப்பதாலேயே அது அவ்விதம் ஆகிறது. ''ஃபங்'' என்னும் சொல் (ஆறாம்குறி) ''சதுரம்'' என்று பொருள்படும். அதனோடு இரண்டாவதான மரம் அல்லது மரக்கட்டையைக் குறிக்கும் ''மூ'' என்ற குறியைச் சேர்த்தால் அது ''பலகை'' ஏழாம்குறி என்று ஆகிறது. பட்டு அல்லது பருத்தி ஆடை என்ற பொருளைக் கொடுக்கும் ''மி'' என்ற 9-ம் எழுத்தை ''ஃபங்'' என்பதனோடு சேர்த்தால் (8-ஆம் சொல்) அது ''நூற்றல்'' என்ற பொருளைக் கொடுக்கிறது.



好 = நல்லது



Unesco

ஹாங்காங்கில் கடைப்பெயர்கள்

ஹாங்காங்கிலுள்ள இந்தத் தெருவில் சீன எழுத்திலுள்ள கடைப் பெயர்கள் கவர்ச்சிகரமான அலங்கார முறையில் காணப்படுவது கவனிக்கத்தக்கது. சீனத்திலும் ஜப்பானிலும் உபயோகப்படும் எழுத்துக்களின் சிறப்பான அழகு எழுதுவதை ஒரு கலையாகத் தோற்றுவித்துள்ளது. அன்றாட உபயோகத்திலுள்ள பொருள்களை அலங்கரிக்கக்கூட சிறப்பும் அழகும் வாய்ந்த குறிப்பிட்டவற்றையே உபயோகப்படுத்துகிறார்கள்.

ஏறக்குறைய உலக ஜனத்தொகையில் நான்கில் ஒரு பாகத்தினர் சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் சீன தேசத்தில் தோன்றிய எழுத்து முறையையே இன்னமும் உபயோகித்து வருகின்றனர். சீன எழுத்து ஒரு தனி வகை; அது நெடுங்கணக்கு முறையில் அமைந்த லிபி அல்ல. ஒவ்வோர் எழுத்தும் முழுமையான ஒரு தனிச் சொல்லைக் குறிக்கிறது.

கிறிஸ்துவுக்கு முன்னால் எட்டாம் நூற்றாண்டு வரை குறிசொல்பவர்களும் மந்திரவாதிகளுமே எழுத்துக் கலையை ஆண்டு வந்தனர் எனலாம். ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டு காலத்துக்குப் பின்னர், அதிகாரக் குவிப்பும், அரசாங்கத்தின் அதிக பட்சக் கண்காணிப்பும் சீன உலகத்திலே பல மாறுதல்களை உண்டாக்கின. இப்போது அறிவும் எழுத்தின் உபயோகமும் அரசாங்க அதிகாரிகளிடமும், அந்தக் காலத்திய தொழில் திறமை வாய்ந்தவர்களிடமும் மாறின.

கி.மு. 221-ஆம் ஆண்டில் கன்ப்யூஷியஸ் மதத்தைச் சார்ந்த செள அரசவமிசம் மறைந்தொழிந்தது. சின் சாம்ராஜ்யம் புதியதாக ஏற்பட்டது. புதிய அரசனான சின்ஷி ஹுவாங்தி செள வமிசத்தாரால் உபயோகிக்கப்பட்ட எழுத்து முறையைவிடச் சுலபமான முறை ஒன்றைத் தோற்றுவித்தான். 'சிறிய முத்திரை' அல்லது 'ஷியோசுவான்' என்பபடும் அந்தப் புதிய முறை மூவாயிரம் குறிகளைக் கொண்டிருந்தது.

ஆனால் சீன எழுத்து முறையிலே முத்திரை எழுத்துகள் பல நெளிகளைக் கொண்டு சித்தரிக்கப்பட்டிருந்தமையால் அன்றாடத் தேவைகளுக்கு ஏற்றதாக இல்லாமல் மிகவும் கஷ்டமானதாக இருந்தது. கி.மு. 206 முதல் கி.பி. 220 வரையில் ஆட்சி புரிந்த

ஹான் வமிசத்தினர் ஆட்சிக்காலத்தில் சிறைச்சாலைகளின் மேற்பார்வையாளர் ஒருவர் சிறைச்சாலை நிர்வாகத்தைச் சுலபமாக்க 'லி-ஷூ' என்ற அதிகார பூர்வமான எழுத்து முறையைக் கண்டுபிடித்தாராம். இன்றைக்குப் பொதுவான உபயோகத்தில் உள்ள அடிப்படையான வடிவங்கள் அந்த லி-ஷூ முறையிலிருந்துதான் உண்டாயின. இந்த வடிவங்கள் பின்னால் பல மாறுதல்களை அடைந்தன.

அந்த மாறுதல்களின் போக்கு வடிவங்களை முறைப்படுத்தவும் கவர்ச்சிகரமாக்கவும் உதவியதெனலாம். கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் காகிதம் செய்முறை சீனத்தில் கண்டுபிடிக்கப்பட்டது எழுத்துக்கலை முன்னேறுவதற்குப் பெரிதும் உதவியது.

ஓவியச் செல்வத்தையும் எடுத்துக்காட்டான உருவங்களையும் கொண்டிருந்ததால் சீன எழுத்து முறை விரைவிலேயே 'சித்திர எழுத்து முறை' எனப்படும் புதிய கலையைத் தோற்றுவித்தது. 'உள்ளத்தில் இருப்பதைப் பேச்சு வெளிப்படுத்துகிறது. எழுதும் முறை அதனை எடுத்துக் காட்டுகிறது' என்று பழைய சீன ஆசிரியர் ஒருவர் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. இந்தக் கோட்பாடே எழுத்துக்களை நிறைவும் பொருத்தமும் கொண்ட முழு உருவம் கிடைக்கும் வகையில் எழுத வேண்டும் என்ற லட்சியத்தில் சித்திர முறையில் எழுதுபவனுக்கு வழி காட்டி.

தூரக்கிழக்கிலுள்ள மக்களில் பல இனத்தவர்கள் சீன எழுத்துக்களை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் தங்களுக்கெனச் சொந்த எழுத்துமுறையைத் தோற்றுவிக்க அதனை ஆதாரமாக உபயோகிக்கின்றனர். ஜப்பானியர்கள் கி.பி. நான்காம் நூற்றாண்டிலேயே அவற்றை உபயோகித்திருக்கக்கூடும். ஆயினும் நமக்குக் கிடைத்துள்ள வரையில் மிகவும் பழமையான ஜப்பானிய எழுத்தோவியம் கி.பி. 712ஆம் ஆண்டைச் சார்ந்ததாகும்.

அடுத்த நூற்றாண்டில் ஜப்பானியர் வேற்றுமை உருபுகளுக்காகச் சீன எழுத்துக்களின் ஒலிக்குறிகள் சிலவற்றைத் தேர்ந்து எடுத்துக் கொண்டார்கள். அவை முதலில் 'ஸோகன' என்று வழங்கப்பெற்றன; பின்னால் ஹிரகன, என்றும் குறிக்கப்பட்டன. அதே காலத்தில் கோணங்களைக் கொண்ட வடிவங்களாலான 'கதகன' என்ற எழுதும் முறை ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டது. இக்காலத்தில் அது அந்நியச் சொற்களை எழுதவே உபயோகிக்கப்படுகிறது.

ஒலி வடிவங்களாகச் சீன எழுத்துக்களைக் கொரியர்களும் உபயோகிக்க முயன்றனர். புதிதாகத் தோன்றிய 'இது' என்ற பெயரைக் கொண்ட அந்த முறை மறைந்துவிட்டது.

ஆனால் அதற்கும் முன்னதாகவே, கி.பி. ஆயிரத்து நானூற்று மூன்றும் ஆண்டில் கொரியர்கள் தனிக்கைக்குறிகளுக்கான அச்சுக்களைக் கொண்டு அச்சிடும் முறையைக் கண்டுபிடித்திருந்தனர். (ஐரோப்பாவில் அச்சுக் கலைக்குத் தந்தை எனக் கருதப்படும் கூடன்பர்க் அப்போது சிறு வயதினர்.

Unesco photos

சீனர்கள் கண்ணுக்கு, ஓவியம் தீட்டுவது போலவே எழுதுவதும் ஒரு தனிக்கலையாகும். ஓவியம் தீட்டுவதும் எழுதுவதும் ஒன்றற்கொன்று மிகவும் நெருங்கியிருப்பதால் சீன ஓவியர்களில் பலர் நூலாசிரியர்களும் ஆவர். மேலே கொடுத்திருப்பது சென்யென்-துங் என்பவருடைய நூலின் ஒரு பக்கம். உருவக ஓவியமும் பாடமும் கொண்டது.

「UNESCO・クーリエ」の各国語版の原本はユネスコ（国際連合教育科学文化機関、Place de Fontenoy, Paris 7e, France）で統一編集されている。



ஜப்பானியர் ஒரே சமயத்தில் மூன்றுவித முறைகளை எழுதுவதற்கு உபயோகிக்கின்றனர். ஹிரகனா: இலக்கண வேற்றுமை முடிவுகளை உணர்த்தும் ஒலிக்குறிகள்; கதகனா: அந்நிய சொற்களைக் குறிக்கக் கோண வடிவங்களைக் கொண்ட எழுத்து முறை; ஜப்பானிய மொழியில் கன்ஜி என்று அழைக்கப்படும் சீனக் குறிகளைக் கொண்டமுறை. இம் மூன்றுவித எழுத்து முறைகளையும் கொண்டு எழுதப்பட்ட மேலே உள்ள பகுதி யுனெஸ்கோ கூரியரின் ஜப்பானியப் பதிப்பிலிருந்து எடுத்தது,

சித்திர எழுத்திலிருந்து அச்சு எழுத்துவரை

சீன மொழியிலே ஒரு பத்திரிகையை அச்சுக் கோர்க்க அச்சக நிர்வாகிக்கு ஏழாயிரம் குறிகளுக்கான அச்சுகளைக்கொண்ட பெட்டி தேவைப்படுகிறது. அச்சுக் கோர்ப்பது கையாலேயே நடைபெறுகிறது. ஜப்பானிய மொழியிலோ இரண்டாயிரம் குறிகளே தேவை. அந்த வேலையை ஒரு மானோ இயந்திரத்தைக் கொண்டு முடிக்கலாம். சீன மொழியில் தானாகவே அச்சுக் கோர்க்கும் இயந்திரம் ஒன்றை உருவாக்க முயல்கிறார்கள்.

டோக்கியோ உயர்நிலைப் பள்ளி மாணவிகள் சிலர் பழங்காலத்து எழுத்தர்களைப் போல மண்டியிட்டு திரைச் சீலைகளில் வண்ணம் தீட்டுகிறார்கள். சீனத்திலும் ஜப்பானிலும் அலங்கார முறையில் எழுதுவது பள்ளிகளிலேயே போதிக்கப்படுகிறது. ஜப்பானில் இந்தக் கலைக்கென பத்திரிகைகளே உள்ளன.

Unesco-Tamagawa Gaknen, Tokyo

“குறிக்கோளுடன் வாழ்ந்தால்தான் நிலைத்திருக்க முடியும்”

“வாழ்க்கைக்கான திட்டம்” கருத்தரங்கில் மொரார்ஜி தேசாய் அறிவுரை

கூரியர் தமிழ்ப்பதிப்பு வெளியீட்டு விழா

யுனெஸ்கோ கூரியர் தமிழ்ப்பதிப்பின் வெளியீட்டு விழாவும் ‘‘வாழ்வதற்கான திட்டம்’’ பற்றிய கருத்தரங்கும் ஜூலை 30ந்தேதியன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. தமிழக அரசு கல்வித்துறை அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் விழாவுக்குத் தலைமை தாங்கினார். செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து கூரியர் தமிழ்ப்பதிப்பை வெளியிட, இந்தியத் துணைப் பிரதமர் திரு மொரார்ஜிதேசாய் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார்.

யுனெஸ்கோ கூரியர் இதுவரை ஐரோப்பிய மொழிகளிலும், மத்திய கிழக்கில் அராபியிலும் தூர-கிழக்கில் ஜப்பானிலும் வெளியிடப்பட்டு வந்தது. தெற்கு, தென்கிழக்காசியாவில் முதலில் வெளிவரும் பெருமை கூரியர் தமிழ்ப் பதிப்புக்கு உரியதாகும்.

பலதுறைப் பிரமுகர்களும் அறிஞர்களும் கலந்துகொண்ட விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் யுனெஸ்கோ செய்தி அலுவலகம் சென்னைப் பிரிவு ‘நிருத்யோதயா’ ஆகியவற்றின் தலைவரான திரு. கே. சுப்பிரமணியம் வரவேற்றார். தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் இயக்குநரும் கூரியர் தமிழ்ப் பதிப்பின் நிர்வாக ஆசிரியருமான திரு எஸ். கோவிந்தராஜுலு தமிழ்ப் பதிப்பை அறிமுகப்படுத்தி அதற்கு யுனெஸ்கோவும் இந்திய சர்க்காரும் தமிழக அரசும் உதவ முன்வந்திருப்பதற்கு நன்றியைத் தெரிவித்தார். ‘கூரியர்’ என்று வேற்றுமொழிப் பெயர் தாங்கி இதழ் வருகிறதே என்று யாரும் வருந்த வேண்டாம் என்றும் அது தூய தமிழ்ச் சொல்தான் என்றும் கூரிய மதி படைத்தவர் என்று அதற்குப்பொருள் என்றும் ஒரு அறிஞர் தம்மிடம் எடுத்துரைத்தார் என அவர் தந்த விளக்கம் அனைவரது உற்சாகமான ஆமோதிப்பைப் பெற்றது.

செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து கூரியரை வெளியிட்டுப் பேசியதாவது: ‘‘உலகத்திலே இருக்கின்ற நல்ல பண்பாடுகள்வளரவும், சமுதாயத்திலே இருக்கின்ற சீர்கேடுகள் ஒழியவும், அனைத்து நாடுகளும் ஒருமித்து முன்னேறவும் ஒரு நல்ல புதிய வழி காணுகின்ற வகையில் யுனெஸ்கோ நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. உலக மொழிகளில் எல்லாம் கருத்துக்களை வழங்கி உலக மக்கள் அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்பதற்காக இதுபோன்ற வெளியீடுகள் வருவதை அனைவரும் நிச்சயமாகப் பாராட்டுவார்கள். நல்ல கருத்துக்களை கூரியர் என்னும் இந்த யுனெஸ்கோவின் தமிழ் வெளியீட்டின் மூலமாக வழங்குவதைக் கண்டு நாம் பூரிப்பும் பெருமையும் அடைகிறோம்.’’

அமைச்சரிடமிருந்து முதல் இதழைப் பெற்றுக்கொண்ட யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் கமிஷன் செயலாளர் திரு கிர்பால் கூறியதாவது:

‘‘இதர சஞ்சிகைகளைப் போன்றதல்ல இது. எதற்கு சின்னமாக இது இருக்கிறது என்பதுதான் முக்கியமானது. உலகைக்காண உதவும் சாளரம் போன்ற இது எல்லோருடைய உள்ளத்திலும் அமைதியை நிலைநாட்டப்பாடுபடும் யுனெஸ்கோவின் கொள்கையைக் கொண்டது. மக்களை ஒருமைப்படுத்தும் பொருள்களே இதில் இருக்கும்; அவர்களைப் பிளவு படுத்தும் விஷயங்கள் இராது. சர்வதேசத் தரத்துக்கேற்ப தமிழ்ப்பதிப்பும் நல்ல முறையில் வந்துள்ளது. பெருமளவில் மக்கள் இதனை வாங்கிப் படித்து பயன்பெறுவார்கள் என்று நம்புகிறேன்.’’

கருத்தரங்கைத் தொடங்கிவைத்த திரு. மொரார்ஜி தேசாய், ‘‘வாழ்க்கையில் ஒரு லட்சியம் இல்லாமல் திட்டமிட முடியாது’’ என்றார். அவர் மேலும் கூறியதாவது:

‘‘திட்டம் வகுப்பதற்கு முன்பு நமது லட்சியம் என்னவென்பதைத் தீர்மானிக்க வேண்டும். ஆனால் இன்றைய உலகத்திலோ வாழ்க்கை லட்சியம் மிகவும் அற்ப விஷயமாக இருக்கிறது. ஏற்றத்தாழ்வுகள் பலவற்றைக் கண்ட நாட்டில் நாம் வாழ்கிறோம். என்று தொடங்கியது என்று நிர்ணயித்து கூற வியலாத கலாசாரத்தையும் நாகரிகத்தையும் கொண்டது அது. பல நாடுகள் உன்னத நிலையையடைந்து இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் அவற்றைத் தேடிக் காண வேண்டியுள்ளது. ஆனால் நமது நாடோ இன்றும் நிலைத்திருக்கிறது. அதன் கலாசாரமும் அழிந்து விடவில்லை. ஏன்? இதை ஆராய்ந்து கண்டறிந்தாலன்றி வாழ்வதற்கான திட்டத்தைத் தேடுவது முழுமையில்லாத ஒன்றாகத்தான் இருக்கும். வாழ்க்கை லட்சியத்துடன் இந்த நாடு இருந்ததால்தான் இது நிலைத்திருக்கிறது என்பது என் கருத்து. இந்த நாட்டின் கலாசாரம் ஓர் உயிருள்ள லட்சியத்தின் மீது கட்டப்பட்டது. எந்த சக்தியும் அதை அழித்துவிட முடியாது. மறைந்துவிட்ட நாடுகள் எல்லாம் அவற்றின் கலாசாரம், நாகரிகத்தின் உச்ச கட்டத்தில்தான் போயின என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. வளமும் பலமும் மேலோங்கியிருந்த போதுதான் அவை அழிந்து போயின; வறுமையில் அல்ல.

வாழ்வதற்கான ஒரு திட்டம் என்பது நமக்கு வேண்டுமென்றால் வாழ்க்கையின் லட்சியத்திலிருந்து அதைப் பிரிக்கக் கூடாது. வாழ்க்கையின் லட்சியம் மகிழ்ச்சிதான். அதை வேண்டாத யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் நிலையான, உண்மையான மகிழ்ச்சி எதுவென்பதை நாம் அறிய வேண்டும். அதை அடைவதற்குத் திட்டமிட வேண்டும். உண்மையான மகிழ்ச்சி எதுவென்பதை அறிந்து கொண்டாலன்றி அதை அடையவே முடியாது. அதை மற்றவர்கள் நமக்கு வழங்கவும் முடியாது. நாமேதான் தேடியடைய வேண்டும்.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு திட்டங்களை நமது முன்னோர்கள் நமக்கு வகுத்துத் தந்துள்ளார்கள். எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியது இது. அறத்துக்கு முதலிடம் தரப்பட்டிருப்பதிலிருந்து மற்ற மூன்றையும் அறவழியில் அடைய வேண்டும் என்பது தெளிவு. எது அறம் என்பதைப் புரிந்து கொண்டு விட்டால் அப்புறம் எல்லாமே எளிதாகி விடும்.’’

கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் தலைமை உரை:

‘‘வாழ்வதற்கான திட்டம் அழகாகவும் குறிக்கோள் கொண்டதாகவும் இணக்கமானதாகவும் இருக்க வேண்டும். தனக்காக மட்டும் ஒருவன் திட்டம் வகுக்கக்கூடாது. தான் வாழும் சமூகத்தை மனதில் கொண்டு வகுக்க வேண்டும். இதற்கு உதவக்கூடிய நிலையான கருத்துக்கள் திருக்குறளில் உள்ளன.

அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு

ஐந்து சால்பு ஊன்றியதூண்

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு

என்புதோல் போர்த்த உடம்பு.

ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல

நாணுடைமை மாந்தர் சிறப்பு

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு

வேளாண்மை செய்தற் பொருட்டு

மண்ணோடியைந்த மரத்தனையர் கண்ணோடு

இயைந்து கண்ணோடாதவர்

வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்

தீமை இலாத சொலல்

மேற்கண்ட குறளில் நல்ல வாழ்க்கையைத் திட்டமிடுவதற்கான அடிப்படையை திருவள்ளுவர் கூறியுள்ளார். அறத்தால் வருவதே இன்பம் என்றும் அவர் வற்புறுத்தியுள்ளார். எனவே அதுவே நமது வாழ்க்கைக்கு அடிப்படையாக இருக்கவேண்டும்.’’

1

2



3

4

1. தமிழ் 'கூரியர்' இதழை துணைப் பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் ஆர்வத்துடன் பார்வையிடுகிறார்.

2. திரு. கே. சுப்பிரமணியம் வரவேற்கிறார்.

3. கருத்தரங்குக்குத் தலைமை வகித்துப் பேசும் கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன்.

4. முதல் இதழை செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து திரு. பிரேம் கிர்பாலிடம் அளிக்கிறார். அருகில் நிற்பவர் நிர்வாக ஆசிரியர் திரு. எஸ். கோவிந்தராஜுலு.

Edited and published by S. Govindarajulu for the Southern Languages Book Trust, 441, Poonamallee High Road, Madras-10 and printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras-26.

ஆணி எழுத்து

ஆப்பு வடிவ அல்லது ஆணி உருவில் உள்ள கோடு எழுத்து மெஸபடோமியாவின் புராதன மக்கள் பலரால் உபயோகிக்கப்பட்டது (பக்கம் 13) 9ம் நூற்றுண்டின் முற்பகுதியை சேர்ந்த இந்த சலவைக் கல் பாளத்தில் பாபிலோன் அரசன் நபு-ஒபலிதின், சூரிய தேவன் ஷாமாஷுக்குக் கட்டிய ஆலயம் பற்றிய சாஸனம் உள்ளது. சித்திரம் வழிபடுவோரை காட்டுகிறது.

British Museum, London - Kunstarchiv. Arntz, The Hague